விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபத்து நான்கு

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 18 திங்கட்கிழமை (02.07.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 196


# வடக்கு தமிழ் மக்கள் மீது பாகுபாடு காட்டும் அரசு

## அமெரிக்கா குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

இலங்கையின் வடபகுதியில் வாழுகின்ற தமிழ் மக்கள் மீது தொடர்ந்தும் பாகுபாடு காட்டப்படுவதாக அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது. அத்துடன் தமிழ் மக்களை நல்லிணக்கத்துடன் அரவணைத்துக் கொள்வதற்கான செயற் திட்டமொன்றை அரசாங்கம் கொண்டிருக்க வேண்டும் எனவும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)

## நாகபூஷணிக்கு இன்று தேர்



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் தேர்த் திருவிழா இன்று நடைபெறும். காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று 9 மணிக்கு நாகபூஷணி அம்மன் தேரில் ஆரோகணிப்பார்.

## இலங்கை மீதான அழுத்தமே சிவ்சங்கர் மேனனின் விஜயம்

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்திய அரசு இலங்கை மீது மேற்கொள்ளும் மற்றொரு அழுத்தமே இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனின் திடீர இலங்கை விஜயத்திற்கான காரணம் என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திசாநாயக்க கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனை அவர் (24ஆம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்மஸ் தீவுக்கு விரையும் அகதிகள்!

(கொழும்பு)

இலங்கை அகதிகளைக் கொண்ட மற்றுமொரு படகு அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவை நேற்று சென்றடைந்துள்ளது. அந்தப் படகில் இலங்கையைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டவர்கள் கிறிஸ்மஸ் தீவை சென்றடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் குறைந்தபட்சம் மூன்று வாரங்கள் வரை பயணம் செய்து கிறிஸ்மஸ் தீவைச் சென்றடைந்திருக்கலாம் என அவுஸ்திரேலிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இதில் இலங்கையைச் சேர்ந்த 53 தமிழ் அகதிகள் இருந்துள்ளதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (24ஆம் பக்கம் பார்க்க)

## மனிதவுரிமையில் மேம்பாடு இல்லாவிடில் ஜெனிவாவில் நடப்பதை காணவேண்டும்!

### இலங்கைக்கு மேனன் வலியுறுத்தல்

(புதுடில்லி)

இலங்கையின் மனிதவுரிமை விவகாரங்களில் இலங்கை அரசாங்கம் கரிசனையுடன் செயற்பாடாதுவிடின் இவ்வருட இறுதியில் ஜெனிவாவில் நடக்கப் போவதை கொழும்பு பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கடந்த வியாழக்கிழமை இரவு விஜயம் செய்திருந்த சிவ்சங்கர் மேனன் கொழும்பில் நடத்திய முக்கிய சந்திப்புக்கள் தொடர்பில் இந்திய ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இவ்வருட இறுதியில் இடம் பெறவுள்ள இலங்கையின் மனிதவுரிமை தொடர்பிலான மீளாய்வு திட்டத்தை மேற்கொள்ளும் மூன்று நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இதன்போது இலங்கை தொடர்பிலான நிலைப்பாட்டை இந்தியா வெளியிடும்.

எனவே இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் அரசாங்கம் அதிகம் கரிசனை கொண்டு செயற்பட வேண்டும். இல்லையேல் அதனால் ஏற்படக் கூடிய பின் விளைவுகளை அரசாங்கம் நினைத்துப் பார்க்க வேண்டும் (24ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச கறுப்புப்பட்டியலில் இலங்கை இணையும் அபாயம்

### ஐ.தே.கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

சர்வதேச அரங்கில் இலங்கை கறுப்புப்பட்டியலில் இடப்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ஊடக சுதந்திரம், தகவல் சுதந்திரமற்ற நாடுகளின் வரிசையில் இலங்கை பட்டியலிடப்படக் கூடிய அபாயம் நிலவுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா மிரர் மற்றும் லங்கா எக்ஸ் நியூஸ் ஆகிய இணையத்தளங்கள் முடக்கப்பட்டு, பணியாளர்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கரு ஜெயசூரிய கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அதிருப்தியளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் (24ஆம் பக்கம் பார்க்க)

## பொத்துவிலில் 800 ஏக்கர் கடற்படையினரின் வசம்!

(கொழும்பு)

பொத்துவில் பாணமையில் 800 ஏக்கர் காணி கடற்படை வசம் உள்ளதாகவும் வடக்குக் கிழக்கில் பெருமளவு காணிகளை அரச படைகள் கையகப்படுத்தியிருப்பதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் வடக்குக் கிழக்கு பகுதிகளில் நிலை கொண்டுள்ள அரச படைகள் பெருமளவான காணிகளைக் கையகப்படுத்தி தமது முகாம்களை விஸ்தரித்து வருவதாக தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

சில இடங்களில் முகாம்கள் விஸ்தரிக்கப்படுவதாகவும் இன்னும் சில இடங்களில் புதிய முகாம்களை அமைப்பதற்காக காணிகள் ஒதுக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. அரச படைகள் காணிகளை கையகப்படுத்துவதால் பெருமளவான குடும்பங்கள் தமது சொந்தக் குடிமனைகளையும் வாழ்வாதாரங்களையும் இழந்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தபின்னணியில் இப்போது கிழக்கே அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் பிர தேசத்திலுள்ள (24ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களுக்கு துரோகமிழைத்த முகர்ஜிக்கு வாக்களிக்கக் கூடாது

## பழ.நெடுமாறன் வேண்டுகோள்

முள்ளிவாய்க்காலில் தமிழர்கள் படுகொலை செய்த போது எதையும் செய்யாத பிரணாப் முகர்ஜிக்கு வாக்களிக்கக் கூடாது என தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

பிரணாப் முகர்ஜி குடியரசு தலைவரான பிறகு மகிழ்ச்சி அடைவது இலங்கை ஜனாதிபதிதான். 2009-ஆம் ஆண்டு வெளியுறவு மந்திரியாக அவர் இருந்தபோது இலங்கை முள்ளிவாய்க்காலில் ஒரு இலட்சத்துக்கு மேலான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அதை தடுத்து நிறுத்த எதையும் செய்யாதவர் பிரணாப் முகர்ஜி. ஆனால் தமிழக மக்களை ஏமாற்றுவதற்காக இலங்கை ஜனாதிபதியுடன் சேர்ந்து போர் நிறுத்தம் செய்வதற்கு ஏற்பாடு செய்வதாக மக்களை திசை திருப்பினார். எனவே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அவருக்கு வாக்களிக்க தமிழ் நாட்டை சேர்ந்த எம்.பி.,எம்.எல்.ஏ க்கள் நன்கு யோசித்து முடிபெடுக்க வேண்டும்.

கூடன்குளம் அணுமின் நிலைய பிரச்சினைக்காக அந்தப் பகுதி மக்கள் போராடி வருகின்றனர். அவர்களிடம் குடி கொண்டுள்ள அச்சத்தை போக்க எவ்வித முயற்சியையும் மத்திய அரசு எடுக்கவில்லை. எனவே மக்களின் அச்சத்தை போக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்த பின்புதான் கூடங்குளம் அணுமின் நிலையத்தை செயல் பட வைக்க வேண்டும்.

போராட்டக் குழுவினருடனும், போராடி வரும் அந்தப்பகுதி மக்களுடனும் முதல் அமைச்சர் ஜெயலலிதா நேரில் சந்தித்து பேச வேண்டும். போராட்டக்குழுவினர் மீது தொடரப்பட்டுள்ள அத்தனை வழக்குகளையும் திரும்ப பெற வேண்டும். கூடன்குளம் அணுமின் நிலையத்திற்கு பேச்சிப்பாறை அணை தண்ணீரை கொண்டுசெல்லும் திட்டத்தை கைவிட வேண்டும். இதற்காக குமரி மாவட்ட மக்கள் போராடி வருகிறார்கள்.

குமரி ரயில்வே திருவனந்தபுரம் கோட்டத்தில் இருப்பதால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அதனை மதுரையுடன் இணைக்க வேண்டும். ஏற்கெனவே டெசோ இயக்கத்தை நானும், வீரமணியும், கருணாநிதியும் சேர்ந்துதான் தொடங்கினோம். ஆனால் அது செயல்படாது என அறிவித்து விட்டு கருணாநிதி ஒதுங்கி விட்டார். அதற்கு அவர் மக்களிடம் மன்னிப்பு கேட்பதோடு விளக்கமும் அளிக்க வேண்டும்.

மீண்டும் டெசோ செயல்படும் என்ற அவரது அழைப்பு மக்களை ஏமாற்றும் செயல் இந்திய அரசில் புதிய பொருளாதார உலக மயமாக்கல் கொள்கை படி உரம் மற்றும் மக்களுக்கு தேவையான மண்ணெண்ணெய், டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் மீதான மானியத்தை கொஞ்சம், கொஞ்சமாக நிறுத்த வேண்டும் என்பதே மத்திய அரசின் திட்டமாகும் என்றார். (எ-11)

# ஜப்பான் குழு இலங்கை விஜயம்

ஜப்பானைச் சேர்ந்த 10 முன்னணி முதலீட்டாளர்கள் நாளை மறுதினம் இலங்கை வரவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர்கள் இலங்கையில் கலாசாரம், வர்த்தகம் மற்றும் நல்லுறவை மேம்படுத்தும் நோக்கில் ஜப்பான்-இலங்கை நிலையம் ஒன்றையும் ஸ்தாபிக்கவுள்ளதாக ஜப்பானிய வர்த்தகக் குழுவின் தலைவர் ஜென்ஜிரோ கனிக்குகோ தெரிவித்துள்ளார்.

பொருளாதார வசதியுள்ள முதியோர் இல்லங்களை ஜப்பானில் ஸ்தாபிக்கும் திட்டம் ஒன்று குறித்து தாம் ஆலோசித்து வரு வதாக தெரிவித்த அவர், அந்த இல்லங்களில் ஆயுர்வேத முறைமைகளை அறிமுகப்படுத் துவது குறித்தும் ஆராய்ந்து வருவதாககுறிப்பிட்டார். (எ-11)

# இலங்கை கடற்படை மீதான வழக்குகளை துரிதப்படுத்த தமிழக அரசு திட்டம்!

(சென்னை)

இலங்கை கடற்படையினர் மீது தமிழக பொலிஸார் தாக்கல் செய்துள்ள வழக்குகளை துரிதப்படுத்த தமிழக அரசு முடிபு செய்துள்ளதாக தெரியவருகின்றது.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டு வரும் நிலையிலேயே தமிழக அரசு இம் முடிபை எடுத்துள்ளதாக கூறப்படுகின்றது.

அத்துடன், கச்சதீவு தொடர்பாக இந்தியா இலங்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கை தீவிரப்படுத்தவும் தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டமை, தாக்கப்பட்டமை மற்றும் அவர்களின் உடைமைகள் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள் இது வரை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

# அதிவேகப் பாதைக்கு கேள்விப் பத்திரம்

வடக்கிற்காக அதிவேக பெருந்தெருவின் முதலாம் கட்டத்தை அமைப்பதற்காக இந்த வருட இறுதிக்கு முன்பதாக கேள்விப் பத்திரங்களை கோருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணித்துள்ளார். கண்டி மாவட்டத்தின் அபிவிருத்திகளின் முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து நேற்று கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பொன்றின் போதே அவர் இந்த பணிப்புரைகளை விடுத்துள்ளார். (எ)

# பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு பூமாவடி பூம்புகார் ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று மாலை 6 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி விசேட ஆராதனைகள் நடைபெற்று நாளை அதிகாலை 2 மணிக்கு தீ மிதித்தலும் காலை 4 மணிக்கு வழிவெட்டலும் நடைபெறும் என பரிபாலன சபை அறிவித்துள்ளது. (8-9)

# ஆயுதக் குழுக்களின் எண்ணிக்கை கிழக்கு மாகாணத்தில் அதிகரிப்பு

## ஆங்கில ஊடகம் தகவல்

மட்டக்களப்பில் அரசியல் பின்னணியுடன் செயற்படும் ஆயுதக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இத்தகைய ஆயுதக் குழுக்களில் சுமார் 150 வரை அங்கம் வகிப்பதாக படைத்துறையின் புலனாய்வுப் பிரிவை மேற்கோள்காட்டி இவ் வூடகம் குறிப்பிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முன்னர் செயற்பட்டு வந்த இவர்கள், விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் குழுவாக தனித்துச் செயற்பட்டு வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து பிரிந்து சென்ற தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் கட்டுப்பாட்டின் கீழும் ஆயுதக் குழுக்கள் செயற்பட்டு வருகின்ற போதிலும், அதனை அக்கட்சி மறுத்துள்ளது.

அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற போர் முடிபுக்கு வந்த பின்னர் பல முஸ்லிம் ஆயுதக் குழுக்களும் தோற்றம் பெற்றுள்ளன. இக்குழுவில் சுமார் 90 பேர் வரை அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழுக்களிடம் பாரிய அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் இல்லாத போதிலும் அவர்கள் தனிப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புபட முடியும் என படைத்துறையின் புலனாய்வுப் பிரிவை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (எ-11)

# இலங்கையரால் சுவிஸ் வங்கியில் 8 கோடி 50 இலட்சம் பிராங் வைப்பீடு

இலங்கையரால் கடந்த வருடத்தில், சுவிட்ஸர்லாந்து வங்கியில் 8கோடியே 50 இலட்சம் சுவிஸ் பிராங் வைப்பில் இடப்பட்டுள்ளதாக சுவிட்ஸர்லாந்து மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரகசிய இலக்கங்களுடன் செயல்படும் முறைமையை இந்த வங்கி கொண்டிருப்பதால், உலகளாவிய ரீதியாக வங்கியில் கணக்குகளை ஆரம்பித்துள்ளனர்.

இதனிடையே, இலங்கையர்களால் கடந்த 10 வருடங்களில் சுவிஸ் வங்கி கணக்குகளில் 910 கோடியே 30 இலட்சம் சுவிஸ் பிராங்குகளை வைப்பிலிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சர்வதேச ரீதியாக வருமான வரி செலுத்தப்படாத நிதியினை பல வழிகளிலும் பெறுபவர்கள் சுவிட்ஸர்லாந்து பாங்கிங் கோப்ரேசன் வங்கியில் வைப்பீடு செய்வது குறிப்பிடத்தக்கது. (எ-11)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்



கார்த்தி. ப்ரணீதா, சந்தானம் மற்றும் பலர் நடித்த

சகுனி

இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு

10.30, 2.30, 6.30, 9.30 D.T.S



17.05.2012 இல் வியாழமாற்றம்

பலாபலன்கள் நூல் ரூபா 50/=
யாழ். நகர் எங்கும் கிடைக்கும்.
ஆக்கம் சோதிடஞானி சண்மாஸ்டர்
ஆ. சண்முகலிங்கம்.
வெளிமாவட்டங்களில்
விற்பனையாளர்களுக்கு விசேட
கழிவு தரப்படும்.
தொடர்பு:- T.P.-0772845000

(8739)



NEWZEALAND இல் உயர்கல்வி

SEPTEMBER IN TAKE

நியுசிலாந்தில்செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பமாக இருக்கும் Diploma கற்கைநெறிக்கு தற்போது மாணவர்களை அனுப்புவதற்கான ஒழுங்குகள் விரைவாக நடைபெறுகிறது.

தகைமை :- G.C.E. O/L ஆறு பாடங்களில் சித்தி. IELTS தேவையில்லை இரண்டு வருட Visa பெற்றுக் கொடுக்கின்றோம். அதன் பின்பு அங்கு நிரந்தரமாக வசிப்பதற்குரிய நிரந்தர வதிவிட அனுமதியையும் பெற்றுக் கொடுப்பதுடன் உங்கள் குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரும் குறுகிய காலத்தில் நியுசிலாந்தில் குடியேற முடியும்.

Canada வில் உயர்கல்வியை / Skilled Migration தகுதி அடிப்படையில் குடியேற விரும்புபவர்கள் குறைந்தது இரண்டு வருட காலத்துக்குள் குடியேறுவதற்கான ஒழுங்குகளை நாம் எமது ஸ்தாபனத்தின் மூலமாக செய்து கொடுக்கின்றோம். இதற்கான தகுதி என்ன என்பதை எம்முடன் தொடர்பு கொண்டு பூரணமான விளக்கத்தை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான தகுதியுடையவர்கள் அவர்களது குடும்பத்துடனேயே Canada வில் குடியேறலாம்.

சிங்கப்பூரில் உயர்கல்வி

BACHELOR / DIPLOMA

Hospitality & Tourism Management பட்டம் பெறுபவர்கள் குறுகிய காலத்தில் Canada வில் குடியுரிமை பெற்றுக் கொள்வதற்கு நாம் ஒழுங்குகள் செய்து கொடுக்கின்றோம்.

தகைமை : G.C.E. O/L ஆறு பாடங்கள் மட்டும்

கட்டணம் : ரூபா 400,000 ஒரு வருடத்துக்கு சிங்கப்பூரில் கல்வியை கற்கும் காலத்தில் அங்கு Part - Time Work செய்வதற்குரிய ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மாதாந்தம் 65,000 வரை வருமானம் பெற்றுக் கொள்ளலாம்.

Colombo இல் தலைமையகத்தைக் கொண்டுள்ள எமது ஸ்தாபனம் தற்போது அதன் கிளையை யாழ் மண்ணில் ஆரம்பித்து இருக்கின்றது. ஆகவே உங்களுக்கு தேவையான மேலதிக விபரங்களை எம்மை நேரில் யாழ்ப்பாணத்தில் சந்தித்து பெற்றுக் கொள்ளலாம்.

Rainbow Travels
113, Chatham st.
Colombo 01

Branch Jaffna
Rainbow Travels
30/2, Third Lane,
Power House Road, Jaffna.
T.P.: 0778980652
0212219596

(C-382)

## இன்று ஒரு தகவல்

# இராசி பலன்

ஒருவர் வேகமாக வந்தார். அவசரமாக ஒரு "நியூஸ் பேப்பர்" வாங்கினார். அதை நின்று கொண்டு அதிக வேகமாக புரட்டிப்படித்தார். ஒரு நிமிடம் எதையோ ஆர்வமாகப் படித்தார். அதன்பின் நிதானமாக மடித்து வைத்தார். அவசரமில்லாமல் நடந்து போனார்.

அவரிடம் மெதுவாகப் போய் "அப்படி எதை சேர்... அவ்வளவு ஆர்வமாகப் பார்த்தீர்கள்" என்று கேட்டேன். "கடையிலே பேப்பர் வாங்கியவுடனேயே முதல் காரியமாக அதைப் பார்த்து விடுவேன் சேர்" என்றார். "எதை?" என்று கேட்டேன்.

"அதுதான் சேர்... இராசிபலன்...! அதைப் பார்த்தால் தான் எனக்கு எல்லாமே சரியாக ஓடும்!" என்றார்.

"அது சரி சேர்... இராசி பலனிலே என்ன எழுதியிருக்கிறதோ, அதன் பிரகாரம் அன்று சரியாக நடக்குமா?" என்று கேட்டேன்.

"நடக்கிறதா இல்லையா என்றாலும்; அதை காலையிலே ஆவலாகப் படித்து விடுவேன். அவ்வளவுதான்" என்றார்.

இராசிபலன் பார்க்கும் பழக்கம் தமிழர்களிடையே அதிகமாக இருக்கிறது. ஒரு பேராசிரியர் எழுதிய ஆய்வுக்கட்டுரை ஒன்றை சம்பவத்திலே படித்தேன்.

இராசிபலன் எழுதி வரும் பேப்பர்தான் அதிகமாகப் விற்பனையாகிறது.

மிகவும் வேடிக்கை சேர்! இலங்கையில் பேப்பர் வாங்கி தன்னுடைய இராசிபலன் பார்த்து விட்டு, பெங்களூரிலே ஓடும் குதிரை மேலே பணம் கட்டுகிறவர்களும் உண்டு. இராசிபலன் பார்த்துவிட்டு அதிர்ஷ்ட இலாபச் சீட்டு வாங்குகிறவர்களும் உண்டு.

வான் மண்டலம்– பூ மண்டலத்தைப் பாதிக்கிறது. உண்மைதான். அதை அறிவியல் பூர்வமாக சிந்திக்க வேண்டும். அதை விட்டுவிட்டு இன்று "நண்பரால் பண வரவு" என்று இராசிபலன் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

நண்பர்கள் எந்தக் காலத்திலே பணம் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள். நண்பர்களை பக்கத்திலேயே இருக்கிற நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. எங்கேயோ இருக்கும் நட்சத்திரத்திற்கு என்ன தெரியும்? இந்த இராசிபலன் பார்க்கும் பழக்கம் நமது ஊக்கத்தை இழக்கச் செய்யக்கூடிய ஒரு பழக்கம்.

ஒரு உதாரணத்திற்கு நாமே ஒரு சோதனை செய்து பார்க்கலாம். ஒரே நாளில் வந்த தினசரி பேப்பர்கள் சிலவற்றை எடுத்துக் கொள்வோம். அதிலே ஒரே இராசிக்கு ஒவ்வொரு பேப்பரிலும் என்ன பலன் போட்டிருக்கிறது என்று பார்ப்போம்.

ஒரு பேப்பரில் ''செலவும் சிரமமும்'' என்று எழுதப்பட்டிருக்கிறது. இன்னொரு பேப்பரில் "சுலபமாக நன்மை" என்று எழுதப்பட்டிருக்கிறது.

இதில் எதை சேர் நம்புவது. நீங்களும் ஒருநாள் இதை சோதித்துப் பாருங்கள். அதன்பின் இந்தப் பழக்கத்தை விட்டு விடுங்கள்.

என்னுடைய நண்பர் ஒருவரும் நானும் ஒருநாள் கடையிலே பேப்பர் வாங்கினோம். நண்பர் இராசிபலனில் நம்பிக்கை இல்லாதவர். இருந்தாலும் நான் பேப்பர் வாங்கியவுடனேயே "உங்கள் இராசி என்ன?" என்று கேட்டான்.

அவர் "ஹீ" என்று சிரித்து விட்டு "அதெல்லாம் டுப்பு..." அதை ஏன் பார்க்கிறீர்கள்?'' என்றார். ''சும்மா சொல்லுங்கள்'' என்றேன்.

"என் இராசி தனுசு... அதிலே 'பணவரவு' என்று எழுதியிருக்கிறது" என்றார். நான் பார்த்தேன். ஆச்சரியப்பட்டேன். "பண வரவு" என்று தான் எழுதப்பட்டிருக்கிறது.

"அது எப்படி சேர்... பார்க்காமலே சரியாக சொல்லுகிறீர்கள்? என்று கேட்டேன். அவர் மெதுவாக அருகில் வந்து, காதோடு காதாக... "அந்தப் பேப்பருக்கு தினமும் இராசிபலன் எழுதிக் கொடுப்பது நான்தானே" அப்படி என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இணையத்தள முற்றுகைக்கு எதிராக வழக்குத் தொடரப்படும்– மங்கள

(கொழும்பு)

ஸ்ரீலங்கா எக்ஸ் நியூஸ் இணையத்தளம் முற்றுகையிடப்பட்டமைக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி இணையத்தளம் முற்றுகையிடப்பட்ட போது கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட 9 பேருடன் இணைந்து இந்த வாரம் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளேன்.

இணையத் தளங்கள் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டுமென்ற சட்டம் நாட்டில் இல்லை. ஆகையினால் ஐக்கிய தேசியக்கட்சியின் இணையத்தளமான ஸ்ரீலங்கா எக்ஸ் நியூஸ் இணையத்தளம் எந்தச் சூழ்நிலையிலும் பதிவு செய்யப்படமாட்டாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-2)

# தே.டிப்ளோமாதாரிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(வவுனியா)

வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2005/2007, 2006/2008, 2007/2009, 2008/2010 ஆகிய கல்வியாண்டுகளில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சி நெறியைப் பின்பற்றி சித்தியடைந்த டிப்ளோமாதாரிகளுக்கான சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கே.பெர்னாட் அறிவித்துள்ளார்.

இச்சான்றிதழ்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவின் போது வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான கடிதமும் விண்ணப்பப்படிவங்களும் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து ஏனைய விபரங்களுடன் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

எதிர்வரும் 7 ஆம் திகதி வரை கடிதம் கிடைக்காதோர் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பிப்பவர்களுக்கு பட்டமளிப்பு விழா ஒழுங்குகள், மண்டப அனுமதிக் கடிதங்கள் யாவும் பின்னர் அனுப்பி வைக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 140 | 90 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 90-110 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 250 | 200 |
| தக்காளி | 120 | 160 | 130' | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 70-80 | 90 | 90 | 80 |
| கரட் | 100 | 140 | 120 | 140 |
| பூசணி | 70-80 | 60 | 30 | 60 |
| புடோல் | 70 | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 50-60 | 50 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 110 | 80-100 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 85 | 90 | 110 | 90 |
| பாகற்காய் | 120 | 160 | 150 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 90 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | -- | 100 | 100 | -- |
| பயற்றங்காய் | 75 | 60 | 150 | 60 |
| லீக்ஸ் | 140 | 160 | 150 | 160 |
| பீற்றூட் | -- | 60 | 70 | 90 |
| கறிமிளகாய் | 160 | 140 | 150 | 180 |
| முருங்கைக்காய் | 100 | 60 | 220 | 120 |
| போஞ்சி | -- | 170 | 150 | 180 |
| கத்தரிதம்புள்ள | -- | 100 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 5-10 | 15 | 25 | 20 |
| தேசிக்காய் | 100 | 90 | 90 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 30 | 20 | 16-20 |

# இராசி பலன்

*02.07.2012*

*(ஆனி 18, திங்கட்கிழமை)*

*சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு*

*சதுர்த்தசி பின்னிரவு 3.04 மணிவரை*

*கேட்டை மாலை 6.21 மணிவரை*

*இராகுகாலம் 7.27-8.57 மணிவரை*

*சுபநேரம் 11.57-1.27 மணிவரை*

**மேடம்** அம்பிகை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு தடவை அலைய நேரிடலாம், உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் அதிகரிக்கும்.

**இடபம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்,சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், அபூர்வ சந்திப்பு இடம்பெறலாம், வாகன சுகமுண்டு, திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

**மிதுனம்** பகைவர் விலகுவர், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், பண வருவாய் திருப்தி தரும், நோய் குணமடையும், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**கடகம்** தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளால் பெருமையடைவீர்கள், தொழிலில் புதிய முதலீடுகளைச் செய்யும் எண்ணம் உருவாகும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**சிங்கம்** கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், புதிய வாகனங்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் சந்திப்புண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**கன்னி** சுவாரஸ்யமான நாள், தொழில் நலன் கருதி புதிய முயற்சியெடுப்பீர்கள், எப்படி நடக்குமோ என நினைத்த காரியமொன்று நல்லபடியாக நடைபெறும், சகோதரர் ஒற்றுமை பலப்படும்.

**துலாம்** தொழில் முன்னேற்றமுண்டு,குடும்பக் கவலைகள் அதிகரிக்கும், புத்தி சாதுரியமாக செயற்பட்டு காரியம் சாதிப்பீர்கள்,பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** நண்பர்கள் உதவியுண்டு,சயன சுகமுண்டு, அஞ்சல் வழியில் அனுகூலமான செய்திகள் வந்து சேரும், சிந்தனை மிகுதியான நாள்,ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**தனுசு** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது,தொழில் முன்னேற்றம் கருதி அதிக பிரயாசை எடுப்பீர்கள், அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள்.

**மகரம்** தெய்வ தரிசனமுண்டு, சேமிப்பு பழக்கம் அதிகரிக்கும், உத்தியோக நன்மையுண்டு,பொருளாதார நிலை உயர்வடையும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**கும்பம்** பிறர் உதவியுண்டு,தொழிலில் அதிக பிரயாசை எடுப்பீர்கள், குறையில் நின்ற பணிகளை மீண்டும் நிறைவேற்றுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,போசன சுகமுண்டு.

**மீனம்** மனதில் அச்சமான நிலை தோன்றலாம், திறமையானவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், உடல் உழைப்புண்டு, போசன நன்மையுண்டு, உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள்.

வளவன்

# வடக்கில் புதிய தொழில்முயற்சிக்கு இலங். முதலீட்டு சபை ஆலோசனை

நீண்ட காலப் போருக்குப் பின்னரான தற்போதைய சூழ்நிலையில் வட மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பல்வேறு புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பித்து நடத்துவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது வட மாகாணத்தில் குறைவான நிலையிலேயே தொழில் விருத்தி காணப்படுகின்றது.

இதற்கு பல்வேறு சமூகப் பொருளாதார அரசியல் காரணிகள் சாதகமாக காணப்பட்டிருக்கவில்லை.

ஆனால் தற்போது இப்பகுதிகளில் அந்நிலைமை மாற்றமடைந்துள்ளது.

தொழில்துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு இலங்கை முதலீட்டுச் சபை வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும், அங்கீகாரத்தினையும் வழங்கி உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவித்து வருவது அனைவரும் அறிந்ததே .

வட மாகாணத்தில் இலங்கை முதலீட்டு சபையால் அடையாளம் காணப்பட்ட வாய்ப்பான தொழில் முயற்சிகள் வருமாறு:

- பல்வேறு வகையான சிறிய, நடுத்தர, பாரிய அளவான கைத் தொழில்கள்.
- விவசாயம் சார்ந்த தொழில் முயற்சிகள் (மரக்கறிச் செய்கை, பழச்செய்கை, தென்னைச்செய்கை, பூந்தோட்டச் செய்கை)
- பண்ணை முறையில் அமைந்த கால்நடை /விலங்கு வேளாண்மை சார்ந்த தொழில் முயற்சிகள்.
- மீன்பிடித்துறை சார்ந்த தொழில் முயற்சிகள்.
- சுற்றுலாத் துறை சார் தொழில் முயற்சிகள்.
- கல்வித்துறை சார் தொழில் முயற்சிகள்(தனியார் கல்வி நிலையங்கள்,தனியார் பல்கலைக்கழகங்கள்)
- சுகாதாரத் துறை சார்ந்த தொழில் முயற்சிகள்(தனியார் வைத்தியசாலைகள், ஆலோசனை நிலையங்கள், ஆய்வுகூடங்கள், மருந்தகங்கள்)
- போக்குவரத்து துறை சார்ந்த தொழில் முயற்சிகள்
- தகவல் தொழில்நுட்பம் சார் தொழில் முயற்சிகள்
- சிறிய மற்றும் பெரிய அளவிலான அடிப்படைக் கட்டுமானம் சார் தொழில் முயற்சிகள் (கடைத் தொகுதிகள்)
- பொது வசதிகள் சார் தொழில் முயற்சிகள்
- சேவைத்துறைசார்ந்த தொழில் முயற்சிகள்

முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் தொழில் முயற்சிகளில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்கள் பல்வேறு வகையான நேரடியானதும் மறைமுகமானதுமான நன்மைகளை அனுபவிக்கக்கூடியதாக இருக்கின்றது.

- தொழில் முயற்சியினூடாக உழைக்கும் வருமானத்திற்கு நீண்ட காலத்திற்கு 4-12 வருடங்களுக்கு வருமான வரி செலுத்தத் தேவையிருக்காது-வருமான வரி விலக்களிப்பு
- தொழில் முயற்சிக்குத் தேவையான பொருட்கள் இறக்குமதி செய்யும்போது இறக்குமதி வரி விலக்களிப்பு
- அரச நிறுவனங்களில் முன்னுரிமை அடிப்படையில் உதவிச் சேவைகள்.
- வங்கிகள்,நிதி நிறுவனங்களில் இருந்து இலகுவாகவும் முன்னுரிமை அடிப்படையிலும் சலுகை அடிப்படையிலும் நிதி வசதிகளை பெற்றுக் கொள்ள முடிதல்.
- அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக செயற்பட முடிதல்.
- தொழில் முயற்சிக்கு காணி தேவைப்படுமிடத்து அரச காணிகளை நீண்ட காலக் குத்தகை அடிப்டையில் பெற்றுக் கொள்ள முடிதல்.
- பிரதேசத்தினதும் நாட்டினதும் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் பங்களிப்புச் செய்யும் தொழில் நிறுவனமாக நிலைநிறுத்திக் கொள்ள முடியும்.

வட பகுதியில் புதிய தொழில் முயற்சியில் ஈடுபட ஆர்வம் உள்ளவர் இலங்கை முதலீட்டுச் சபையின் வழிகாட்டலுடனும் ஆலோசனையுடனும் அங்கீகாரத்துடனும் உரிய சலுகைகளுடன் ஆரம்பித்து நடத்திச் செல்ல முடியும் எனவும்

இதுதொடர்பான மேலதிக விபரங்களுக்கும் ஆலோசனைகளுக்கும், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை முதலீட்டுச் சபை வட பிராந்திய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளலாம் என இலங்கை முதலீட்டுச் சபையின் வட பிராந்திய காரியாலய சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் ஆர்.ஜெயமனோன் அறிவித்துள்ளார்.




# யூலை முதல் மிலங்கா விலைச்சுட்டெண் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளில் மாற்றம்

மிலங்கா விலைச் சுட்டடெண்ணில் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகள் யூலை 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மீள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில்,இதுவரை காலமும் பட்டியலிடப்பட்டிருந்த எயிட்கன் ஸ்பென்ஸ் பிஎல்சி, டிஎவ்சிசி வங்கி, டிஸ்டிலரிஸ் கம்பனி ஒஃவ் சிறிலங்கா பிஎல்சி, ஹற்றன் நஷனல்வங்கி,எல்பிஃபினாணஸ்மற்றும் ரோயல் செரமிக்ஸ், லங்கா பிஎல்சி போன்ற நிறுவனங்கள் மிலங்கா சுட்டியிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

இந்த நிறுவனங்களுக்கு பதிலாக பிரவுண்ஸ் இன்வெஸ்மன்ட் பிஎல்சி,ஈஸ்ட் வெஸ்ட் புறொப்பர்டீஸ் பிஎல்சி, எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி, ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி, நேஷன் லங்கா ஃபினான்ஸ் பிஎல்சி மற்றும் பீசி ஹவுஸ்பிஎல்சி போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன.

கடந்த காலாண்டு பகுதியில் அதிகளவு திரவத் தன்மை வாய்ந்த பங்கு நிறுவனங்களை கருத்தில் கொண்டு மேற்படி மீளாய்வு மேற் கொள்ளப்பட்டிருந்ததாக கொழும்பு பங்குச் சந்தை வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

கொழும்பு பங்குச் சந்தையை பொறுத்தமட்டில் கடந்த வாரம் மீண்டும் சரிவான நிலையை அவதானிக்க முடிந்தது. புதிய விலைச் சுட்டியான S&P SL20 முதலிரு கடந்த வெள்ளிக்கிழமை 6 புள்ளிகள் அதிகரித்து நிறைவடைந்திருந்தது. இலங்கைக்கான அமெரிக்காவின் ஜிஎஸ்பி பிளஸ் சலுகை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது எனும் செய்தி வெளியானதை தொடர்ந்து அடுத்த வாரம் பங்குச் சந்தையில் இதன் தாக்கம் சாதகமானதாக அமைந்திருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும் பொழுது அனைத்து விலைச் சுட்டெண் 4965.77 ஆகவும் மிலங்கா விலைச் சுட்டெண் 4383.20 ஆகவும் அமைந்திருந்தது.

யூன்25 ஆம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்குப் புரள்வு பெறுமதியாக ரூபா.11,591,206,391 அமைந்திருந்தது. கடந்த வாரம் மொத்தமாக 24,983 பங்கு கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 24,134 ஆகவும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 846 ஆகவும் பதிவாகியிருந்தன. முன்னைய வாரத்துடன் ஒப்பிடுகையில் மொத்த பங்கு புரள்வானது இரு மடங்கு வீழ்ச்சியை காண்பித்திருந்தது.

கடந்த வார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் எஸ்.எம்.பி லீசிங் (சாதாரண) எச்.டி.எவ்.சி, நுவரெலியா போகல கிராபைட் மற்றும் உடபுசல்லாவ போன்றன முதல் ஐந்து சிறந்த இலாபமீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

ஹியுஜே கலாமசூ, ஏஎம்.ப் கோலிமி ரம்பொட ஃபோல்ஸ் மற்றும் லங்கா செரமிக் போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நஷ்ட மீட்டியதாக பதிவாகியிருந்தன.

# கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சி

ஐரோப்பிய நாடுகளின் நிதி நெருக்கடி, மத்திய கிழக்கு நாடுகளின் அரசியல் நிலைவரம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் சர்வதேச நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மந்த நிலையில் உள்ளது. இதனால் ஐரோப்பிய நாடுகளில் கச்சா எண்ணெய்,புடைவை உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் பயன்பாடு குறைந்துள்ளது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்யை பொறுத்தவரை, உற்பத்தி குறையாமல் உள்ளது. இதனால், இதன் விலை தொடர்ந்து சரிவடைந்து வருகிறது. சென்ற ஏப்ரல் மாதம், ஒரு பீப்பாய் கச்சாய் எண்ணெய் விலை, 125 டொலராக இருந்தது இது தற்போது, 25 சதவீதத்திற்கும் மேல் குறைந்து, 80 டொலருக்கும் கீழ் சரிவடைந்துள்ளது.

இந்நிலையில் அண்மையில் இந்திய அரசு எண்ணெய் விலையை குறைத்தது. ஆனால் இலங்கையில் எண்ணெய் விலை குறையுமா என்பது தெரியவில்லை.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 131.94 | 135.46 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 205.52 | 211.77 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 165.51 | 171.28 |
| சுவிஸ் பிராங் | 137.27 | 142.65 |
| கனேடிய டொலர் | 127.57 | 132.29 |
| அவுஸ்திரேலிய டொலர் | 132.96 | 138.27 |
| சிங்கப்பூர் டொலர் | 103.07 | 106.76 |
| ஜப்பான் யென் | 1.65 | 1.71 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.34 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.29 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# யூன் பணவீக்கம் அதிகரிப்பு

தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் (2006/7=100) அளவிடப்பட்டவாறான பணவீக்கம் ஆண்டு சராசரி அடிப்படையில், முன்னைய மாதத்தின் 5.6 சதவீதத்திலிருந்து 2012 யூனில் 5.8 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது.

ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் பணவீக்கம் 2012 மேயின் 7 சதவீதத்திலிருந்து 2012 யூனில் 9.3 சதவீதத்திற்கு உயர்வடைந்தமைக்கு சில உணவுப் பொருட்களில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களும் 2011 யூனில் பதிவு செய்யப்பட்ட தாழ்ந்த தளமுமே முக்கிய காரணங்களாக அமைந்தன.

அதேவேளையில், மையப் பண வீக்கம் ஆண்டு சராசரி அடிப்படையில் 2012 மேயில் 6 சதவீதத்திலிருந்து 2012 யூனில் 5.7 சதவீதத்திற்கு தொடர்ந்து ஒன்பது மாதமாக வீழ்ச்சியடைந்த வேளையில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் முன்னைய மாதத்தின் 4.8 சதவீதத்திலிருந்து 2012 யூனில் 5.8 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது.

# மைக்ரோசொப்ட்-மீடியா சென்டர் இடையிலான பிணக்குத் தீர்ந்தது

எதிர்காலத்தில் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் மென்பொருட்களை அனுமதிப்பத்திரம் இன்றி விற்பனை செய்வதோ அல்லது விநியோகிப்பதோ குற்றமென மீடியா சென்ரர் ஏற்றுக் கொண்டதை அடுத்து வழக்கு சுமுகமாக தீர்க்கப்பட்டுள்ளது.

மீடியா சென்டருக்கு (தற்போது சாட்டிஜிட்டல்) எதிராக மைக்ரோசொப்ட் நிறுவனம் 2010ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வர்த்தக மேல் நீதி மன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தது.

இல. 315, முதலாம் மாடி, யுனிட்டி பிளாசா கொழும்பு- 4 முகவரியில் அமைந்துள்ள அந் நிறுவனம் வின்டோஸ் எக்ஸ்பி புரபொஷனல் மற்றும் ஒபிஸ் என்ரபிரைஸ் 2007 ஆகியவற்றை புதிய கணனி களுக்கு உரிமம் பெறாமல் பதிவு செய்து பாவனையாளர்களுக்கு விற்பனை செய்துள்ளது. இது தவிர உத்தரவாத சான்றிதழ்களையும் விநியோகிக்காது செயற்பட்டுள்ளதுடன் அசல் டிவிடி டிஸ்க் அந் நிறுவனத்தால் விநியோகிக்கப்படவில்லை.

சட்டபூர்வமற்ற வர்த்தகமும் மென்பொருள் கொள்ளையால் பாதிக்கப்படும் பாவனையாளரும் எம்மால் எடுக்கப்பட்ட அனைத்து சுமுக தீர்மானங்களும் முற்றுப் பெற்ற நிலையில் சட்ட ரீதியான நடவடிக்கைக்கு செல்ல தீர்மானித்தோம். கணனிகளை கொள்வனவு செய்ததுடன் பாவனையாளர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை கருத்திற் கொண்டே நாம் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க தீர்மானித்தோம். புதிய கணனியை கொள்வனவு செய்வதால் ஏற்பட்ட சோதனைப் பதிப்பு மற்றும் வைரஸ் பரவுதல் போன்றவற்றை அவர்கள் தொடர்ச்சியாக முன்வைத்தனர்.

எமது சட்டத்தரணிகள் பிரச்சினையை சுமுகமாக தீர்ப்பதற்கு பல்வேறு கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர். நாம் வழங்கிய சலுகை களின் அடிப்படையில் பெரும்பாலான நேரங்களில் வர்த்தகர்கள் தமது தவறுக்காக வருத்தம் தெரிவித்ததுடன் பிரச்சினையை சுமுகமாக தீர்க்க இணக்கம் தெரிவித்தனர் என மைக்ரோசொப்ட் கூட்டுறவின் சட்ட பிரதிநிதி ஜொனத்தன் செல்வசேகரம் தெரிவித்தார்.

# வருகிறது உலகின் பெரிய அளவு ரிவி

ஷார்ப் நிறுவனம் புதிய 90 இன்ச் உலக பெரிய அளவு தொலைக்காட்சியை களமிறக்க உள்ளது.

திரையரங்க திரை போல் இருக்கும் இந்த தொலைக்காட்சிக்கு ஆகுவோஸ் எல்இடி ரிவி எனப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

4 அடி உயரம், 6 அடி அகலம் என்று வரும் இந்த தொலைக்காட்சி பார்பதற்கு மிகவும் பிரமாண்டமாக இருக்கும். இது மிகவும் துல்லியமாக இருக்கும் ஏனெனில் இதன் ரிசலூசன் அதிகமாக இருக்கிறது.



இதன் விலை 11 ஆயிரம் அமெரிக்க டொலர்கள்.

இந்த தொலைக்காட்சி இணையத்தள இணைப்புவசதியும்கொண்டிருக்கிறது.

# இனப்பிரச்சினை தீர்வு போராட்டங்களில் முஸ்லிம் மக்களும் பங்கேற்க வேண்டும்

## மனோ கணேசன் அழைப்பு



(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு வரும் போது அதில் தமக்கும் பங்கு வேண்டும் என்றும் தாமும் பேச்சுவார்த்தையில் ஒரு தரப்பினர் என்றும் உரிமைக் கோரிக்கை விடுக்கும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தீர்வை தேடி தமிழ் கட்சிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடத்தும் போராட்டங்களிலும் பங்கு பெற வேண்டும். உண்மையில் அதற்கு போராட முஸ்லிம் மக்கள் தயாராக இருக்கின்றார்கள்.

ஆனால் முஸ்லிம் தலைவர்கள் சிலர்தான் தயங்கி நிற்கின்றார்கள் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நண்பர் அசாத் சாலி முஸ்லிம்களும் தமிழர்களும் பெரும்பான்மை இனவாதத்திற்கும் மதவாதத்திற்கும் எதிராக இணைந்து போராட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். தமிழர்களாகிய நாங்கள் போராடுகிறோம்.

எத்தனை பின்னடைவுகள் ஏற்பாட்டாலும் நாம் மனம் தளராமல் தொடர்ந்து போராடுகிறோம். தமிழ் கட்சிகள் மத்தியில் எத்துனை அரசியல் சித்து விளையாட்டுக்கள் இருந்தாலும் அவற்றை தவிர்த்துக் கொண்டும் கணிசமான தமிழ்க் கட்சிகளை ஒன்று சேர்ந்துக் கொண்டும் நாம் ஜனநாயக போராட்டங்களை நடத்துகின்றோம்.

இந்தப்போராட்டங்களுடன் இணைந்து கொள்ளும்படி நாம் உங்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம். இது தொடர்பில் முஸ்லிம் கட்சிகள் முடிபு எடுக்க வேண்டிய வேளை இன்று வந்து விட்டது.

வலிக்காமல் போராட வேண்டும் என்றால் அது நடக்காத காரியம். பதவிகள், பட்டங்கள், வரப்பிர சாதங்கள் பறிபோகும் என நீங்கள் அச்சப்படுவீர்கள் என்றால் அது இல்லாத ஊருக்கு வழி தேடும் கதையாகும்.

எனக்கு இன்று கட்சி தலைவர் பதவி ஒன்றுதான் இருக்கின்றது. ஆனால் பதவி, பட்டங்களில் இருக்கும் எத்தனையோ பேரைவிட நான் எனது கட்சியை திடமாக வழிநடத்துவதாகவும் தமிழ் பேசும் மக்கள் என் மீது மிகுந்த பற்றுக் கொண்டு இருப்பதாகவும் நான் உறுதியாக நம்புகிறேன்.ஏனென்றால் நாம் அநீதிக்கு எதிராக துணிந்து நிற்கின்றோம்.

இணைந்து போராடுவோம் என மேடைகளில் பேசி பிரயோசனம் இல்லை. அதிகார பகிர்வு, மண்ணுரிமை ஆகியவற்றிற்கான தமிழ் கட்சிகளின் ஜனநாயக போராட்டங்கள் இன்று ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

எங்கள் போராட்டங்களுடன் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள். முஸ்லிம் மக்களின் காணி, நிலம் கிழக்கில் பறிக்கப்படுவது, முஸ்லிம் பகுதிகளுக்கு அரசியல் அதிகாரம் பகிரப்பட வேண்டியது மற்றும் மத சுதந்திரம் தொடர்பில் நீங்களும் போராடுங்கள். நாம் சேர்ந்து போராடுவோம் போராட்டத்தில் பங்களித்து விட்டு அரசியல் தீர்வில் பங்கு கோருங்கள். (அ-2)

## இணையத்தளங்கள் தொடர்பில் கண்காணிப்புப் பணிகள் ஆரம்பம்

### ஊடக அமைச்சு தகவல்

(கொழும்பு)

சில இணையத்தளங்கள் தொடர்பில் கண்காணிப்புப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

4 முதல் 5 இணையத்தளங்கள் தொடர்பில் கண்காணிக்கப்பட்டு வருவதாக ஊடக அமைச்சின் செயலாளர் டபிள்யூ.ஜீ.கனேகல தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சில் பதிவு செய்யாது வதந்திகள் மற்றும் கிசுகிசுக்களை பிரதானமான செய்திகளாக வெளியிட்டு வரும் இணையத்தளங்களே இவ்வாறு கண்காணிக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் நாட்டில் இதுவரையில் 45 இணையத்தளங்கள் மட்டுமே அரசாங்கத்தகவல் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். பதிவு செய்யப்படாத பலீ இணையத்தளங்கள் ஊடக ஒழுக்கவிதிகளுக்கு புறம்பாகவே செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பதிவு செய்யாமல் வதந்திகளைப் பரப்பி வரும் இணையத்தளங்களுக்க எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விசேட கல்வி நூற்றாண்டையொட்டிய போட்டிகள்-2012

**வடமாகாணத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பங்குபற்ற முடியும்**

**தொனிப்பொருள்- விசேடதேவைக்குட்பட்டவர்களை கல்வியினால் வலுவூட்டுவோம்.**

மாணவர்களுக்கானது- சித்திரப்போட்டி பின்வரும் தலைப் புகளில் ஒன்றை தெரிவு செய்து A3 அளவுடைய கடதாசியில் விரும்பிய வர்ண ஊடகத்தை பயன்படுத்தி வரைந்து அனுப்ப வேண்டும்.

- ★ உட்படுத்தற் கல்வி வகுப்பறை
- ★ விசேட தேவையுடைய மாணவர்களின் சாதனைகள்
- ★ விசேட தேவையுடைய மாணவர்களை ஏற்றுக்கொள்வோம்
- ★ எல்லோருக்கும் கல்வி

1. ஆரம்பப்பிரிவு தரம் - 1-5 வரை
2. இடைநிலைப் பிரிவு தரம் 6-11 வரை
3. மேற்பிரிவு க.பொ.த.உயர் தரம்

ஆசிரியர்களுக்கானது -சகல பாடத்துறை ஆசிரியர்களும் பங்குபற்றலாம்.

1. இறுவெட்டு தயாரித்தல் போட்டி

விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலை மேம்படுத்தத்தக்க வகையில் அமைதல் வேண்டும்.

2. கற்பித்தல் சாதன உருவாக்கப் போட்டி

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கக்கூடிய கற் றல்-கற்பித்தல் சாதனங்களாக அமைதல் வேண்டும்.

☆ இப்போட்டிக்கான முடிவுத் திகதி 15-07-2012 சித்திரங்களை, இறுவெட்டுகளை நேரில் அல்லது தபால் மூலம் சமர்ப்பிக்கலாம்.

☆ கற்பித்தல் சாதன உருவாக்கப் போட்டிக்கான விண்ணப்பம் சுயமாக தயாரிக்கப்பட்டு 10/07/2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும்.

மேற்படி போட்டிகள் மாவட்ட மட்டத்திலும் ,மாகாண மட்டத்திலும் நடைபெறும். பங்குபற்றும் அனைவருக்கும் பெறுமதியான சான்றி தழ் வழங்கப்படும். மாவட்ட, மராகாண மட்டத்தில் தெரிவானவர்களுக்கு பரிசில்கள், விசேட கேடயங்கள் வழங்கப்படும்.

த.சிவகுமார்
விரிவுரையாளர் (விசேட கல்வித்துறை)
யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற் கல்லூரி.
0776184250

S.K. யோகநாதன்
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற் கல்லூரி.


## மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

| | | | |
|---|---|---|---|
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-கார்த்திகை 3<br>கி.பா:-11.5, 8 இல் செவ்<br>தொழில்:-மிதிவெடி அகற்றும் நிறுவனம்<br>எதிர்பார்ப்பு:-தொழில்நிறுவனம் / தொழிலற்ற பெண்<br>B/039 | பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பரணி 3<br>கி.பா:-33<br>தொழில்:-சொந்த மருந்தக முகாமையாளர்(யாழ்)<br>எதிர்பார்ப்பு:-விசேடமாக வெளிநாடு<br>G/026 | பிறப்பு:- 1989 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-கேட்டை 4<br>கி.பா:-39.5<br>தொழில்:-பாலர்பள்ளி ஆசிரியை(யாழ்)<br>எதிர்பார்ப்பு:-வெளிநாடு மணமகன் (கனடா கூடுதல் விருப்பம்)<br>G/029 | பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-திருவோணம் 1<br>கி.பா:-61.25, லக்ன செவ்<br>தொழில்:-அரசநிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>எதிர்பார்ப்பு:-அரச/தனியார் உத்தியோகம்<br>G/032 |
| பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்திரட்டாதி 1<br>கி.பா:-25.25<br>தொழில்:-NDB பிளானிங்மனேச்சர் (Col)<br>எதிர்பார்ப்பு:-வெளிநாட்டுப் பெண்,கிறிஸ்தவ சமயம் ஏற்கப்படும்.<br>B/034 | பிறப்பு:- 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-மகம் 4<br>கி.பா:-6, 12 இல்செவ்<br>தொழில்:-முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு:-அரச/தனியார் உத்தியோகம்<br>G/017 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-ஆயிலியம் 1<br>கி.பா:-31.75<br>தொழில்:-முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு:-வெளிநாடு விசேடம், உள்நாடும் ஏற்கப்படும்<br>G/014 | பிறப்பு:- 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-திருவாதிரை 3<br>கி.பா:-28<br>தொழில்:-விமான சீட்டு ஒழுங்கமைப்பாளர் ச.தே.தொடர்பு<br>எதிர்பார்ப்பு:-வெளிநாடு மணமகன்<br>G/008 |
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-ஆயிலியம் 2<br>கி.பா:-28.75, 12 இல் செவ்<br>தொழில்:-CAA பல்கலைக்கழகம்<br>B/005 | பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-மகம் 3<br>கி.பா:-62, 12 இல் செவ்<br>தொழில்:-MA பட்டதாரி, உதவி நூலகர்<br>G/002 | | |
| பிறப்பு:- 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூரம் 4<br>கி.பா:-24, 12 இல் செவ்<br>தொழில்:-சந்தைப்படுத்தும் அதிகாரி<br>B/001 | பிறப்பு:- 1983 இந்து செட்டியார்<br>நட்சத்திரம்:-உத்தரம் 1<br>கி.பா:-43, லக்ன செவ்<br>தொழில்:-நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் சைவ போசனம்<br>எதிர்பார்ப்பு:-சைவ போசனம் முள்ளவர்<br>G/004 | | |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna.gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி

# யாழ். குடாநாட்டில் திருட்டு சம்பவங்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக திருட்டு சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

ஆயுதமுனையில் அரங்கேறும் இவ்வாறான திருட்டுச் சம்பவங்களினால் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

தன்னை மறந்து ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் வேளை ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைவோரால் இந்த அவல நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி கோப்பாய் இராச பாதை வீதியில் உள்ள வீட்டினுள் நுழைந்த திருடர்கள் இரண்டு வயதுக் குழந்தையை பணயமாக வைத்து சுமார் 50 பவுண் தங்க நகைகள், ஒரு தொகைப் பணம், இரண்டு கணனி என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

ஆயுதமுனையில் நடந்தேறிய இந்த திருட்டுச் சம்பவத்தினால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

துணிகரமாக மேற்கொள்ளப்பட்ட இந்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படவில்லை.

இதேபோன்று பல திருட்டுச் சம்பவங்கள் குறுகிய காலப் பகுதியில் குடாநாட்டில் இடம்பெற்றுள்ளன.

அதிலும் கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளிலேயே தொடர்ந்து இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பகுதியில் கடந்த இரண்டு மாதங்களுக்குள் பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதில் பொற்பதி விநாயகர் ஆலயத்திலும் அப்பகுதியிலுள்ள அம்மன் கோவிலிலும் இருந்த சுவாமியை வைத்து அடியவர்களினால் காவிச் செல்லப்படும் மரத்தினாலான வாகனங்கள் திருடப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதி சுமார் 12 இலட்சத்திற்கும் அதிகம் என ஏற்கனவே கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பல திருட்டுச் சம்பவங்கள் கடந்த காலங்களிலும் இடம்பெற்றுள்ளன. அதிலும் குறிப்பாக இந்து ஆலயங்களை மையப்படுத்திய பல திருட்டுச் சம்பவங்கள் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ளன.

இவற்றைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாகவுள்ளது. (அ-6)

## வாகன விபத்தில் முதியவர் படுகாயம்

(கரவெட்டி)

அல்வாய் கிழக்கு இலகடிப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற முச்சக்கர வண்டி - மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மந்திகையில் இருந்து வந்த முச்சக்கர வண்டியும் நெல்லியடியில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதிய விபத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கப்பூது பகுதியை சேர்ந்த நவரட்ணம் செல்லையா (வயது-75) என்ற வயோதிபரே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

விசாரணையை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-24)

## சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 87 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

(கரவெட்டி)

வடமராட்சிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் அதிகளவான வர்த்தகர்கள் சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்ததாக 87 வர்த்தர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பருத்தித்துறை மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரி தாத பிள்ளை அசோகரட்ணம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமராட்சி பிரதேசத்தில் கடந்த ஒரு வாரத்திற்குள் வர்த்தக நிலையங்களை சோதனையிட்ட போது 87 வர்த்தகர்கள் சிக்கியுள்ளனர்.

இவர்களில் முதற்கட்டமாக 25 வர்த்தகர்களுக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது.

ஏனையோர் எதிர்வரும் நாட்களில் இரண்டு கட்டங்களாக மன்றில் ஆஜர்படுத்தப் படவுள்ளனர்.

வர்த்தகர்கள், வயதை தீவிரமாக ஆராய்ந்து பின்னரே சிகரெட்டை விற்பனை செய்ய வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-24)

## விளையாட்டு பொறுப்பாசிரியர்களுக்கு கல்வித் திணைக்களம் அழைப்பு

(பூந்தோட்டம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்று அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு தகுதி பெற்றுள்ள பாடசாலை அணிகள் தங்கள் இறுதி அணிப்பட்டியல்களை சரிபார்த்து உறுதிப்படுத்திக்கொள்வதற்காக இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களை சமுகமளிக்குமாறு வடமாகாண கல்வித் திணைக்களத்தின் மாணவர் அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்திய பாலன் அழைப்பு விடுத்துள்ளார்.

எனவே அன்றைய தினம் அணிப்பட்டியலை பார்வையிட்டு தேசிய மட்டப்போட்டிகளுக்கு மாணவர்களை தயார்படுத்துமாறும் அவர் கோரியுள்ளார். (அ-9-266)




## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப்பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## வடக்கில் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்ட தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள், தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யா/ இந்து மகளிர் கல்லூரியில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறும் வருகை தருகின்ற போது புதிய பாடசாலையில் பதிவுகளை ஏற்றுக்கொண்ட கடிதப்பிரதிகளையும் எடுத்து வருமாறும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் அறிவித்துள்ளார். (அ-9)

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

டி.எஸ்.ஐ.நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது என வடமாகாண கல்வித்திணைக்களத்தின் மாணவர் அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்திய பாலன் தெரிவித்துள்ளார்.

மாவட்ட மட்ட டி.எஸ். ஐ. கரப்பந்தாட்ட போட்டிகளிலிருந்து முதல் நான்கு இடங்களைப் பெற்ற 14 வயதுக்குட்பட்ட, 16 வயதுக்குட்பட்ட மற்றும் 18 வயதுக்குட்பட்ட வயதுப்பிரிவு ஆண், பெண் அணிகள் இப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன.

எனவே தெரிவு செய்யப்பட்ட அணிகளை குறித்த நேரத்திற்கு போட்டி நடைபெறும் இடத்திற்கு வருகைதருமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (அ-9-266)

## அறவொளி கட்டடத்தில் தொழிற்பயிற்சி நிலையம்




(தனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம் கைதடி, நுணாவில் பகுதியில் அறவொளி கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் தையல், கணனி, அழகுக்கலை போன்ற பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறியை கற்க விரும்பும் 13 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் தமது பதிவுகளை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னதாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் காட்வெயர், அலுமினியம் பிற்றிங், சிங்கள வகுப்புக்கள் என்பனவும் ஆரம்பிக்கப்படவுள்ளதால் இதற்கான பதிவுகளையும் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-37)

புங்குடுதீவு பிட்டியம்பதி ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய தேர்த்திருவிழாவின் போது அம்பாள் தேரில் ஆரோ கணித்திருப்பதையும் பக்தர்கள் காவடி எடுத்து நேர்த்திக் கடன் செய்வதையும் படங்களில் காணலாம்.

# தண்ணீருக்காக கண்ணீர் விடும் முசிரன்பிட்டி கிராம மக்கள்

(புளியம்பொக்கணை)

புளியம்பொக்கணை கிராமசேவகர் பிரிவில் உள்ள முசிரன்பிட்டி என்னும் கிராமத்தில் குடிநீர் இன்றி மக்கள அல்லலுறுகின்றனர்.

மேற்குறித்த பகுதியில் 61 குடும்பங்களுக்கு இந்திய அரசின் நிதியுதவியுடன் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் இப்பகுதி மக்கள் குடிநீர் இன்றி அல்லல்பட்டு வருகின்றனர்.

தொண்டு நிறுவனம் ஒன்றின் ஊடாக 3 கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்ற போதும் அக்கிணற்று வேலைகள் பூர்த்தியாக்கப்படாமையால் அக்கிணறுகள் ஊடாகவும் தண்ணீர் பெறமுடியாதுள்ளது.

அத்துடன் மீளெழுச்சித்திட்டத்தின் ஊடாக ஒரு கிணறு இவ்விடத்தில் அமைக்கப்பட்டு வருகின்ற போதும் இக்கிணற்றுவேலையும் பூர்த்தியாக் கப்படவில்லை.

இதனால் இக்கிராமத்தில் உள்ள மக்கள் தண்ணீர்த்தாகத்துடன் வாழ் வதோடு தமது தாகத்தை போக்க யார் முன்வருவார்கள் என்ற ஏக் கத்துடன் காத்திருக்கின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனை கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து இலகுவான முறையில் நீரை பெற்று தாகம் தீர்க்க உதவ வேண்டுமென அப்பகுதி மக்கள் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர் .

(அ-3-263)

# மஹிந்தவின் மைத்துனர் வீட்டில் திருடப்பட்ட பணத்தின் பெறுமதி என்ன?

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவன தலைவர் நிசாந்த விக்ரமசிங்கவின் மகன் கடந்த வருடம் இலங்கைக்கு வந்த போது 3.1 மில்லியன் ரூபாய்களை கொண்டு வந்த போதும் அதனை சுரங்க பகுதியினருக்கு தெரிவிக்கவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமது மனைவியின் குடும்பத்தினருக்கு சன்மானமாக இந்த தொகையை எடுத்து வந்ததாக ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் தலைவரும் இலங்கையின் முதல் பெண்மணியின் சகோதரருமான நிசாந்த விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கல்கிசையில் அண்மையில் நிசாந்த விக்ரமசிங்கவின் வீட்டில் இருந்து பெறுமதியான பொருட்களும் வெளிநாட்டு பணமும் களவாடப்பட்டன. பின்னர் அவை போதைப் பொருள் பாவனையாளர் ஒருவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டன.

இந்த நிலையில் களவாடப்பட்ட பொருட்களில் 11 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர்களும் 10 ஆயிரத்து 500 ஸ்ரேலிங் பவுண்களும் போதைப்பொருள் பாவனையாளரிடம் இருந்து மீட்கப்பட்டதாக தெரிய வருகின்றது.

எனினும் பொலிஸின் உத்தியோகபூர்வ அறிக்கையின்படி 4 மில்லியன் ரூபாய்கள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எத்தனையோ பேர் இலங்கைக்கு வரும் போது பல விடயங்களுக்காக பெருந்தொகைப்பணத்தை கொண்டு வருகின்றனர். தமது மகன் கொண்டு வந்த பணமும் தேவை ஒன்றுக்காகவே கொண்டு வரப்பட்டது என நிசாந்த விக்ரமசிங்க தெரிவித்தார். (அ-2)

# ராஜ் ராஜரட்ணத்துக்கு எதிராக மற்றொரு வழக்கு பதிவாகியது

(கொழும்பு)

75 மில்லியன் அமெரிக்க டொலர்களை இழப்பீடாக கோரி விடுதலைப்புலிகளின் குண்டு தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் 30 உறவினர்கள் தமிழ் வர்த்தகரான ராஜ் ராஜரட்ணத்துக்கு எதிராக தாக்கல் செய்திருந்த வழக்கு அமெரிக்க உயர் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

ராஜ் ராஜரட்ணம் விடுதலைப் புலிகளுக்கு 5 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளதாக சாட்சியங்களை முன்வைத்து பிரபல சட்டத்தரணியான மைக்கல் எல்ஸனர் இந்த வழக்கை அமெரிக்க உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

நுகேகொட, கோட்டை தொடருந்து நிலையம், பிலியந்தல, வெலிவேரிய ஆகிய இடங்களில் இடம்பெற்ற குண்டு தாக்கதல்களில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் இந்த வழக்கை தொடர்ந்துள்ளனர்.

இந்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு ராஜரட்ணத்தின் சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க பங்குச் சந்தையில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் தண்டனை பெற்றுள்ள ராஜ் ராஜரட்ணம் அமெரிக்க சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# தொடரும் வரட்சியால் மின்உற்பத்தியில் பாதிப்பு

## மின்சக்தி அமைச்சு தகவல்

(கொழும்பு)

இலங்கையின் மின்உற்பத்தியில் பிரதான பங்கு வகிக்கும் நீர் மின் நிலையங்களுக்கு அண்மையான நீர்த்தேக்கங்கள் பருவமழை பொய்த்து விட்டதன் காரணமாக வறண்டு வருகின்றன. இந்நிலையானது தேசிய மின்உற்பத்தியில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நீர் மின்நிலைய உற்பத்தி குறைபாட்டின் காரணமாக 87 வீதம் எரிபொருள் மூலமே தற்போது மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதால் ஒரு மின் அலகுக்கு 5 ரூபா 50 சதம் நட்டமேற்படுவதாக தெரிவித்துள்ளது.

மேலும் பிரதான நீர்த்தேக்கங்களான கொத்மலை நீர்த்தேக்கத்தில் 29 வீத நீர் மட்டும் விக்டோரியாவில் 14 வீத நீர் மட்டும் காசல் ரீயில் 11 வீத நீர் மட்டும் தற்போது உள்ளதாகவும் இத்தகைய இக்கட்டான நிலையில் பொது மக்களின் பூரண ஒத்துழைப்பு மிகவும் அவசியமானதெனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் மின்சாரத்தை சிக்கனமாக பாவிக்கும்படி போதிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வரும் நிலையில் வீதி விளக்குகள் பகல் பொழுதுகளிலும் பல இடங்களில் எரிவது பற்றிக் குறிப்பிட்டுள்ள மின்சக்தி அமைச்சு வீதி விளக்குகள் மின்சார சபையின் பொறுப்பின்றி உள்ளூராட்சி சபைகளின் கீழேயே உள்ளன.

அமைச்சினால் பல முறை இது பற்றி உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவித்தும் பலன் இல்லை. இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியப்படுத்தியுள்ளது.

(அ-2)

# மாதாந்த நிறைநிலா கலைவிழா

(பூந்தோட்டம்)

வடமாகாண கல்வித்திணைக்களத்தின் மாதாந்த நிறைநிலா கலைவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

வடமாகாண கல்விப்பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி- பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

வரவேற்புரையை வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜா நிகழ்த்தவுள்ளார். இவ்விழாவில் வவுனியா தெற்கு வலய பாடசாலை மாணவர்களின் இயல், இசை, நாடக நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக விழா ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (அ-3-266)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### இன்று தேர்த் திருவிழா

## சுகமான தீர்வு தாரும்

பார் போற்றும் நாயகியே பார்வதியின் வடிவினலோ
பேர் பெற்ற நயினையிலே பேரருள் புரிபவளே
தேரோடும் வேளையெல்லாம் தீர்வொன்று தாருமென்று
பாமாலை சூட்டுகின்றோம் பயனேதும் இல்லையோ சொல்
எனக்கென்று தனியாக எதையுமே கேட்பதில்லை
மனக்குறையொன்று உண்டு மன்றாடுகின்றேனம்மா
எமக்கான மண்ணில் நாம் எல்லோரும் சேர்ந்து வாழ
சுணங்காமல் சுகமான தீர்வொன்றை தாருமம்மா

கவிமணி அன்னைதாஸன்
ஊரெழு

## மணிபல்லவ தேவியவள் தேரிலே பவனி

பூக்களினை சொரிகிறோம் நாகபூசணியை போற்றுகிறோம்
மெய்யான பாசத்தோடு பக்தர்களின் வேண்டுதல்கள்

பூமியில் பிறந்ததன் ஆழம் புரிந்திடவே
அன்னையவளின் அன்பினை ஆயுள் முழுவதும் பெற்றிடு

கடலாட்சி புரியும் நாகம்மாளின் இடத்திலே
தேரிலே பவனி ஊர்வலம் திகட்டாத பக்தி பரவசம்

மருதங்கேணியூர்
வே.வே.அகிலேஸ்வரன்

## துன்பம் போக்கும் தாயவளே!


துன்பம் போக்கும் தாயவளே நயினை நாகேஸ்வரி தாயே
நாகமாய் வந்து அருள் சொரிவாய் நானில மக்களையும் காத்தருள்வாய்
சக்தியின் பீடமே நயினைத்தலம் அம்மா புத்திகள் பல ஊட்டி துன்பம் களைவாய்
எத்திசை அடியார் நின்று தொழுதாலும் அருள் சுரக்கும் அன்புத்தாயவளே நாகபூஷணி
சித்திரத்தேரினிலே சிறப்புற ஏறி சிங்காரச் சிரிப்பினிலே உன் அருள்மழை சுரக்க
நாகம்மையே அடியார்களின் துன்பங்களை களைந்து
இன்பத்தைக் கொடுப்பாய் நயினையாம் பதிவாழ்
நாகபூஷணி தாயே

கதிர் மகிந்தன்- துர்க்கா
நயினை 07

## துயர் தீரம்மா...

நாகவள்ளியே எழில்கள் கொஞ்சும் நானிலத்தாளே வனப்பு மிக்காய் உன்
தேரேறும் காட்சியை காண ஆரமுதே காத்திருந்தோம் அம்மா கேளீர்
அன்பு செய்வார் இல்லாமல் அழுதே வாழ்ந்தோம்
துன்ப முற்றோம் தாயவளே தேரேறி வாம்மா
துவண்ட தமிழ் நெஞ்சங்கள் துயரை கேளீர்
தேரேறி வந்து நம் துயர் தீரம்மா...

பா.மதனபாரதி
அல்வாய்

வடமாகாண கல்வித்துறையில் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வுக் கலந்துரையாடல் அண்மையில் வடமாகாண ஆளுநர் அலுவலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், அப்போதைய வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மற்றும் வடமாகாண கல்வித்துறையின் அதிகாரிகள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி உரையாற்றுவதையும்படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# தேர்தல் களத்தில் குதிக்க முன்பு வேட்பாளருக்கு வந்தது ஆபத்து

(மட்டக்களப்பு)

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தலில் போட்டியிட அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் தயாராகி வருகின்றன.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் தேர்தலில் போட்டியிடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் வேட்பாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக முறைப்பாடுகள் வந்துள்ளன.

தனக்கும் இவ்வாறான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைச் சேர்ந்த காரைதீவு பிரதேசசபை தலைவர் செல்லையா இராசையா பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

கைத்தொலைபேசியொன்றில் பேசிய ஒருவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடக்கூடாது என்று அச்சுறுத்தல் விடுத்ததாகவும் தன்னையும் தனது ஆதரவாளர்களையும் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு வற்புறுத்தியதாகவும் செல்லையா இராசையா தெரிவிக்கின்றார்.

அச்சுறுத்தல் விடுத்த நபர் சிங்கள மொழியிலேயே தன்னுடன் உரையாடியதாக கூறும் அவர், இது தொடர்பாக தொலைபேசி இலக்கத்துடன் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கின்றார். இதுதொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருவதாக பொலிஸார் கூறுகின்றனர். (அ-2)

# முன்னாள் முதலமைச்சர்களுக்கு வேட்பாளர் வாய்ப்பு கிடைக்காது

## சிங்கள நாளேடு தகவல்

(கொழும்பு)

மாகாண சபைத்தேர்தலில் முன்னாள் முதலமைச்சர்களுக்கு மீண்டும் முதலமைச்சர் வேட்பாளர் வாய்ப்பு கிடைக்காது என சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய மாகாண சபைகளுக்கான ஆளும் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர்கள் பற்றி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் புதிய வேட்பாளர்களை நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. நிர்வாகத் திறமையுடைய மூன்று அமைச்சர்களை முதலமைச்சர் வேட்பாளர்களாக நிறுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

அமைச்சர் பதவிகளை துறந்த இவர்கள் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட உள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. இதன்படி ஏற்கனவே பதவி வகித்து வந்த முதலமைச்சர்கள் இம்முறை பிரதம வேட்பாளர்களாக நிறுத்தப்படமாட்டார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறெனினும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு கட்சியின் வேட்பாளர்களோ, முதலமைச்சர் வேட்பாளரோ இதுவரையில் தெரிவு செய்யப்படவில்லை. (அ-2)

# கூட்டமைப்பின் இரு எம்.பி.க்கள் சர்வதேச தமிழர் விழாவில் பங்கேற்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. யோகேஸ்வரன் ஆகியோர் கனடாவுக்கு சென்றுள்ளனர்.

நேற்றைய தினம் நடைபெற்ற உலகத் தமிழ் பண்பாட்டுக்கழகத்தின் கனடாக்கிளை நடத்தும் சர்வதேச தமிழர் விழாவில் மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு தமிழர் பண்பாடு மற்றும் சமூக ஈடுபாடு தொடர்பான விடயங்களில் சிறப்புரையாற்றினர்.

விமானம் மூலம் கனடாவின் ரொரன்ரோ நகரைச் சென்றடைந்த மேற்படி இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களையும் வரவேற்கச் சென்றிருந்த உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அகில தலைவர் திருவேல் பிள்ளை உட்பட இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் வரவேற்றனர். (அ-2)

# வவுனியா கைதிகளிடமிருந்து கைத்தொலைபேசிகள் மீட்பு

(வவுனியா)

வவுனியா சிறையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது கைதிகளுடையது எனக் கூறப்படும் கையடக்கத்தொலைபேசிகளும் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் பணிப்புரைக்கு அமைய சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இதன்போது 28 கையடக்கத்தொலைபேசிகளும் 20 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டதாக அமைச்சு தெரிவித்துள்ளது.வவுனியா சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து அங்கிருந்த கைதிகள் மூன்று சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டனர்.

வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 28 தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு சந்தேக நபர்கள் போகம்பரை மற்றும் மஹர சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டனர். ஏனைய கைதிகள் அநுராதபுரம் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தீப்பரவல் காரணமாக 40 ஏக்கர் நிலம் நாசம்

(வெல்லவாய)

வெல்லவாய குருகம பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள தீப்பரவல் காரணமாக இதுவரையான காலப்பகுதிக்குள் 40 ஏக்கர் நிலம் அழிவடைந்துள்ளது.

புத்தளம் மற்றும் வருணகம படை முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீயை அணைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த தீப்பரவலின் காரணமாக உயிரிழப்புக்கள் எதுவும் பதிவாகவில்லை என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சஜீவ மெதவத்த தெரிவித்தார். (அ-2)

# கிழக்கு தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் இணைந்து போட்டியிடத் திட்டம்

(மட்டக்களப்பு)

கிழக்கு தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் கூட்டாக இணைந்து போட்டியிடத் திட்டமிட்டுள்ளன. ஒரே சின்னத்தின் கீழ் அனைத்து முஸ்லிம் கட்சிகளும் போட்டியிடுவது குறித்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முயற்சி மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இம்முறை மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவருக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என்பதே அனைத்து கட்சிகளின் விருப்பமாக அமைந்துள்ளது.

ஒரு சின்னத்தின் கீழ் அனைத்து முஸ்லிம் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிட்டால் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட வேண்டுமென முஸ்லிம் கட்சிகள் வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.இந்நிலையில் தேர்தலில் எதனடிப்படையில் போட்டியிடுவது என்பது குறித்து இதுவரை இறுதித்தீர்மானம் எடுக்கப்பட வில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

வெளிநாடு சென்றுள்ள தலைவர் ரவூப் ஹக்கீம் நாடு திரும்பியதும் இது குறித்து இறுதித்தீர்மானம் எடுக்கப்படும் என கட்சியின் பொருளாளரும் எம்.பியுமான அஸ்லம் மொஹமட் சலீம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் கூட்டணியாக போட்டியிடுவதாயின் முதலமைச்சர் வேட்பாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டும். இது குறித்து கட்சித் தலைமை ஜனாதிபதியுடன் அடுத்த சில நாட்கள் பேச்சு நடத்தவுள்ளது.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இரகசிய பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.எனினும் இது குறித்து மொஹமட் சலீம் எம்.பியிடம் கேட்டபோது, அவ்வாறான எந்தப் பேச்சுக்களும் இடம்பெறவில்லை என்றார். (அ-2)

# கட்டுவன துப்பாக்கி சூட்டு சம்பவத்துடன் தொடர்புபட்ட மேலும் ஒருவர் கைது

கட்டுவன துப்பாக்கி சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுவன பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் இரவு குற்றத்தடுப்பு பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர் கைது செய்யப்பட்ட அதேவேளை ரீ 56 வகை துப்பாக்கிகள், ரவைகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஏற்கனவே கட்டுவன துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 175

## பெர்லினின் வீழ்ச்சியும் பாசிச ஜேர்மனி நிபந்தனையின்றி சரணடைதலும்



அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்- யுததத்தின் முடிவில் காலமானார்

### நேசநாட்டுத் துருப்புகளின் இராணுவ நடவடிக்கைகள்...

...அனுகூலமான நிலவரத்தைப் பயன்படுத்திக் கொண்ட நேசநாட்டுப் படைத்தலைமை ஜேர்மனின்யின் ஆழத்திற்குள் தாக்குதல் தொடுப்பதென முடிவு செய்தது. பெப்ரவரி-மார்ச்சில் நேசநாட்டுத் துருப்புகள் விசேட தடையின்றி ரைன் ஆற்றின் மேற்கு கரையை அடைந்தது. இதைக் கடந்ததால் முக்கியத் தொழிற்துறை பிரதேசமாகிய ரூரைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. ரூர் பிரதேசத்தைச் சுற்றி வடக்கேயிருந்து 21-வது படைத் தொகுதியின் சக்திகளைக் கொண்டும் தெற்கேயிருந்து 12-வது படையைத் தொடுத்து பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் ரூர் படைத்திரட்டைச் சுற்றிவளைத்து ரூர் நடவடிக்கையை நிறைவேற்றுவதென பிரிட்டிஷ்- அமெரிக்கப் படைத்தலைமை திட்டமிட்டது. அதேநேரத்தில் 6-வது படைத் தொகுதியின் சக்திகளைக் கொண்டு ரைன் ஆற்றைக் கடந்து ஜேர்மனியின் தென்பகுதியை நோக்கி மேற்கொண்டு முன்னேறுவது என்றும் திட்டமிடப் பட்டது.


மூன்று நாள்- விமானப்படை, ஒரு மணி நேர பீரங்கிப்படையின் பூர்வாங்கத் தாக்குதலுக்குப் பின் வேஸல் பிரதேசத்தில் மே 23 ஆம் திகதி 21-வது படைத் தொகுதியின் துருப்புகள் ரைனைக் கடப்பது தொடங்கியது. இது வெற்றிகரமான நடந்தது. அடுத்தநாள் காலை வாக்கில் நேசநாட்டுத் துருப்புகள் ஒரு சில தாக்குமுனைகளைக் கைப்பற்றி அங்கே தமது துருப்புகளைக் குவிக்க ஆரம்பித்தன. அதே நாளன்று ரைனிலிருந்து 6-8 கி.மீ. தள்ளி இரண்டு வான் இறக்குப் படை டிவிசன்களின் படையிறக்கம் ஆரம்பமாகியது. போக்கு வரத்து விமானப் படைக்கு கணிசமான இழப் புகள் ஏற்பட்ட போதிலும் இதுவும் வெற்றிகரமாக நடந்தேறியது. 1,595 விமானங்களில் 493 விமானங் களும் 1,347 கிளைடர் விமானங்களில் 337 விமானங்களும் சேதமுற்றன. மார்ச் 24 ஆம் திகதி இரண்டாம் பாதியில் விமான இறக்குப்படை டிவிசன்கள் ஜேர்மனியர்களின் எதிர்ப் பைச் சந்திக்காது ஒன்றுடன் ஒன்றும் முன்புறம் முன்னேறிக்கொண்டிருந்த துருப்புகளுடனும் இணைந்தன. தரைப்படை மற்றும் வான் இறக்குப் படைத் துருப்புகளின் வெற்றி பலத்த விமானப்படை ஆதரவாலும் பொறியியல் துருப்புகளின் விரைவான, திறமை



இத்தாலி ஜனாதிபதி முசோலினி

யான பணியாலும் வகை செய்யப் பட்டது. மார்ச் 24 ஆம் திகதி மட்டும் நேசநாட்டு விமானப்படை சுமார் 8 ஆயிரம் பறத்தல்களை நடத்திய தெனில் ஜேர்மனிய விமானப் படையோ 100க்கும் குறைவான வான் பறத்தல்களை மட்டுமே நடத்தியது. நேச நாட்டவரின் பொறியியல் படைப்

## பாசிச ஜேர்மனியின் முறியடிப்பு முற்றுப்பெறுதல்



தொங்கவிடப்பட்டிருக்கும் முசோலினி, அவரது மனைவி கிளாரெட்டா பெட்டாசியின் உடல்கள்

பிரிவுகள் மார்ச் 26 ஆம் திகதி மாலை வாக்கிலேயே 21-வது படைத் தொகுதியின் மண்டலத்தில் ரைன் ஆற்றின் மீது 12 பாலங்களை அமைத்தன. இவையனைத்தும் மார்ச் 28 ஆம் திகதி இறுதியில் 60 கி.மீ. நீளமும் 30 கி.மீ. ஆழமும் உடைய தாக்குமுனையைப் பிடிக்க அமெரிக்க-பிரிட்டிஷ் துருப்பு களுக்கு உதவின.

12-வது, 6-வது படைத் தொகுதியின் துருப்புகள் மாய்ன், ரிமாயினுக்கு தெற்கேயுள்ள பிரதேசங்களில் முன்னர் கைப்பற்றிய தாக்குமுனைகளை விரிவுபடுத்தி மான்கெய்ம் பிரதேசத்தின் ரைன் ஆற்றைக் கடந்தன. இதையடுத்து 1-வது, 9-வது அமெரிக்கப் படைகள் ரூரைத் தெற்கேயிருந்தும் வடக்கேயிருந்துமாகச் சுற்றிவந்து ஏப்ரல் 1 ஆம் திகதி லிப்ஷ்தாத், பாதெர்பேர்ன் பிரதேசத்தில் இணைந்தன. 325,000 பேர்களடங்கிய பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் ரூர் படைத்திரட்டு சுற்றிவளைக்கப்பட்டது. விரைவிலேயே இது சரணடைந்தது.



தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்ட முசோலினி, சுட்டுக்கொல்லப்பட்ட அவரது மனைவி கிளாரெட்டா பெட்டாசின் உடல்கள்

சோவியத் இராணுவத்தின் தாக்குதல்களுக்கு உள்ளாகும் அச்சமும் தமது தொழில் நிலையங்கள், சுரங்கங்களை அழிவிலிருந்து காப்பாற்ற ரூர் பண முதலைகள் கொண்டிருந்த நாட்டமும் பாசிச ஜேர்மனியத் துருப்புகள் விரைவாகச் சரணடைய உதவின.

எதிரியின் ரூர் படைத்திரட்டை நேச நாட்டினர் முறியடித்தபின் பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் மேற்குப் போர்முனை சிதறியது. அணி அணியாகச் சென்ற நேசநாட்டுத் துருப்புகள் எதிர்ப்பைச் சந்திக்காது முன்னேறி ஏப்ரல் 25 ஆம் திகதி எல்பா ஆற்றில் தோர்காவு பிரதேசத்தில் 1-வது உக்ரேனிய சேனையின் துருப்புகளைச் சந்தித்தன.

இத்தாலியப் போர்முனையில் நேச நாட்டுத் துருப்புகள் 1945 ஜனவரியில் தாக்குதலில் இறங்கி மாதநடுவில் 15 -20 கி.மீ. தூரம் முன்னேறின. எதிர்ப்பு இயக்கப்பிரிவுகளும் யூனிட்டுகளும் இவற்றிற்குப் பெரிதும் உதவின. கிளர்ந்தெழுந்த மக்கள் ஏப்ரல் 25 ஆம் திகதி மிலான் நகரைத் கைப்பற்றினர். மலைகளுக்குத் தப்பியோடிய இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி கெரில்லாப்படை வீரர்களால் கைப்பற்றப்பட்டு விசாரணைக்குப்பின் தூக்கிலிடப்பட்டான். நேச நாட்டுத் துருப்புகள், சரணடைந்த பாசிச ஜேர்மனியத் துருப்புகளை ஏற்க ஆரம்பித்தன. ஆனால், திடீரென 1945 ஏப்ரல் 12 ஆம்திகதி

இத்தாலிய ஜனாதிபதி முசோலினியை மக்கள் சூழ்ந்துள்ளபொழுது



அமெரிக்கா ஜனாதிபதி ரூஸ்வெல்ட் காலமானார். இவருடைய மரணத்தால் பாசிசத் தலைமையின் மத்தியில் பாசிச ஜேர்மனியைக் காப்பாற்றும் நம்பிக்கை தோன்றியது. 1762 ஆம் ஆண்டு ஏழாண்டு யுத்தத்தின்போது ருஷ்யப் பேரரசி யெலிஸவேத்தா எதிர்பாராவிதமாக மரணமடைந்து மூன்றாம் பீட்டர் சிம்மாசனத்திற்கு வந்தது, பிரஷ்யாவைத் தோல்வியிலிருந்து காப்பாற்றியதைப் போன்றே இப்போதும் நடைபெறுமென ஹிட்லர் எதிர்பார்த்தான். பாசிச பிரச்சாரம் ரூஸ்வெல்டின் மரணத்தை வரப்பிரசாதமாயும் யுத்தத்தின் திருப்பு முனையாகவும் அறிவித்தது. ஆனால், பாசிசப் படைத்தலைமை பாசிச ஜேர்மனியைக் காப்பாற்றலாம் என வீணாகக் கணக்குபோட்டது. யுத்தம் நடந்தவரை பாசிச எதிர்ப்புக் கூட்டணி பாசிசத்தை முறியடிக்கும் பொதுக் கடமையை நிறைவேற்றியது.

(தொடரும்)

# செங்கல்பட்டு சிறைக் கைதிகள் நால்வருக்கு பலன் கிடைத்தது

(செங்கல்பட்டு)

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்ட இலங்கை தமிழர்கள் 30 பேர் அடைக்கப்பட்டு உள்ளனர். ஆயுதம் கடத்தல், கடவுச்சீட்டு, விசா இல்லாமல் தங்கி இருத்தல் உள்ளிட்ட பல வழக்குகள் இவர்கள் மீது தொடரப்பட்டு உள்ளன.

கடந்த 2 ஆண்டுகளாக சிறப்பு முகாமில் இருக்கும் இவர்கள் தங்களை திறந்தவெளி முகாமிக்கு மாற்ற வேண்டும் என்று கோரி கடந்த பெப்ரவரி, ஏப்ரல் மாதங்களில் தொடர் உண்ணாவிரதம் இருந்தனர். அதிகாரிகள் அளித்த உறுதி மொழியை அடுத்து உண்ணாவிரதத்தை கைவிட்டனர்.

ஆனால்அவர்களின்கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை: இதனை கண்டித்து இலங்கை தமிழர்கள் கடந்த 15 ஆம் திகதி முதல் காலவரையற்ற உண்ணாவிரதத்தை தொடங்கினார்கள்.

இவர்களின் 9 பேர் நிலைமை கவலைக்கிடமானது. அவர்கள் செங்கல்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலையிலும் அவர்கள் உண்ணாவிரதத்தை தொடர்ந்தனர். அவர்களை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் செயலாளர் தா. பாண்டியன் ஆகியோர் சந்தித்து பேசினார்கள். இலங்கை தமிழர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் இலங்கை தமிழர்கள் சிவக்குமார், லோகநாதன், கமலாசரண், தணுசன் ஆகிய 4 பேரை திறந்தவெளி முகாமுக்கு மாற்ற கியூ பிராஞ்ச் பொலிஸாரிடம் இருந்து உத்தரவு வந்துள்ளது.

அவர்கள் நேற்று சிறப்பு முகாமில் இருந்து விடுவிக்கப்படுவார்கள் எனத் தெரிகிறது.

(அ-2)

# புகலிடம் பெற்றுக்கொள்வதற்காக போலிக்குற்றச்சாட்டுக்கள் முன்வைப்பு

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

புகலிடம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் போலி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் தாம் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்து அதன்மூலம் வெளிநாடுகளில் புகலிடம் பெற்றுக்கொள்ளப்பட்டு வருவதாகக் தெரிவிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கைகளுக்கு சில அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

பாதுகாப்பு படையினரால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து இவ்வாறு புகலிடம் கோரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வர்த்தகரின் பிள்ளைகள் வெளிநாடு ஒன்றில் வாழ்ந்து வருவதாகவும் விசாவை நீட்டித்துக் கொள்ள இவ்வாறு போலி ஆவணமொன்று அவசியப்படுவதாக அந்நாட்டு சட்டத்தரணி வழங்கிய ஆலோசனைக்கு அமைய வர்த்தகர் போலி ஆவணங்களை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டமை அம்பலமாகியுள்ளது.

இவ்வாறு பலர் போலியான முறையில் வெளிநாடுகளில் புகலிடம் பெற்றுக் கொள்வதற்காக பாதுகாப்பு படையினர் அச்சுறுத்துவதாகவும் துன்புறுத்துவதாகவும் குற்றம் சுமத்தி வருவதாக பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலர் இவ்வாறு போலியான முறையில் மேற்குலக நாடுகளில் புகலிடம் பெற்றுக் கொள்ள முயற்சித்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-8-1)

# ஊடகங்கள் மீதான தொந்தரவுகள் தொடர்பில் அமெரிக்கா கவலை

ஸ்ரீலங்கா மிரர் மற்றும் லங்கா எக்ஸ் நியூஸ் இணையத்தள ஊழியர்கள் 9 பேர் கைது செய்யப்பட்டமை உட்பட மேற்படி இணையத்தளங்கள் தொடர்பான விவகாரத்தை அமெரிக்கத் தூதரகம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது என அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்தி இணையத்தளங்களை முடக்குதல், அச்சுறுத்தல், ஊடகவியலாளர் காணாமல் போதல் உட்பட சுயாதீன செய்தி ஊடகங்களை ஒடுக்குவதற்கான முயற்சிகள் தொடர்பாக பலதடவை நாம் எமது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளோம்.

தணிக்கை செய்யப்படாத சுயாதீன ஊடகம் அனைத்து பிரஜைகளுக்கும் கிடைக்கக் கூடியதாக இருப்பது துடிப்பான ஜனநாயகத்தின் தவிர்க்க முடியாது அம்சம் என அமெரிக்கா நம்புகிறது.

இந்த மற்றும் ஏனைய அனைத்து ஊடகவியலாளர்கள் மீதான தொந்தரவுகள் நிறுத்தப்பட வேண்டும் என நாம் கோருகிறோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-2)

# 2012.07 02 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1578-மார்ட்டின் புரோபிஷர் கனடாவின் பஃபின் தீவைக் கண்டார்.

★ 1698-தோமஸ் சேவரி முதலாவது நீராவிப் பொறிக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1823-பிரேசிலில் போர்த்துக்கேயரின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

★ 1853-ரஷ்யா துருக்கியின் மீது படையெடுத்தது. கிரிமியப் போர் ஆரம்பமானது.

★ 1876-மொண்டெனேகிரோ துருக்கி மீது போரை அறிவித்தது.

★ 1881-அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் கார்ஃபீல்ட் சுடப்பட்டுப் படுகாயமடைந்தார். இவர் செப்டெம்பர் 19 இல் மரணமானார்.

★ 1917-ஐக்கிய அமெரிக்கா, இலினொய் மாநிலத்தில் கறுப்பினத்தவர்களுக்கும் வெள்ளையர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலவரத்தில் 48 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1940-சுபாஸ் சந்திரபோஸ் கொல்கத்தாவில் கைது செய்யப்பட்டார்.

★ 1941-உக்ரைனில் லூட்ஸ் நகரத்தில் 2 ஆயிரம் யூதர்கள் நாசி ஜேர்மனியர்களினால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1962-முதலாவது வோல் மார்ட் அங்காடி ஆர்கன்சா மாநிலத்தில் திறக்கப்பட்டது.

★ 1966-பிரெஞ்சு இராணுவத்தினர் பசுபிக் பெருங்கடலில் அணுவாயுதச் சோதனையை நிகழ்த்தினர்.

★ 1976 -1954 முதல் பிரிந்திருந்த வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம்கள் மீண்டும் இணைந்து கொண்டன.

★ 1990-மெக்காவில் ஹஜ் யாத்திரையின் போது இடம்பெற்ற நெரிசலில் ஆயிரத்து 426 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2002-உலகத்தை பலூனில் தனியே இடைவேளை விடாது பறந்த முதல் மனிதர் என்ற பெருமையை ஸ்டீவ் ஃபொசெட் பெற்றார்.

★ 2004-ஆசியான் அமைப்பில் பாகிஸ்தான் இணைந்தது.

**பிறப்புக்கள்**

★ 1923-விஸ்லாவா சிம்போர்ஸ்கா, நோபல் பரிசு பெற்ற போலந்து எழுத்தாளர்

★ 1877-ஹேர்மன் ஹெசே, இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற கவிஞர் (இ.1962)

**இறப்புக்கள்**

★ 1566-நோஸ்ராடாமஸ், பிரெஞ்சு சோதிடர் (பி.1503)

★ 1582-அக்கெச்சி மிட்சுஹீடெ, ஜப்பானிய சாமுராய் (பி.1528)

★ 1961-ஏர்னெஸ்ட் ஹெமிங்வே, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர் (பி.1899)



நோஸ்ராடாமஸ் 1503 டிசெம்பர் 14 பிரான்ஸின் வடக்கு பகுதியில் யூத தம்பதியினருக்கு பிறந்தார். மருத்துவராக சாதாரண வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார். திடீரென பிரான்ஸ்ஸில் கொள்ளை நோய் பரவத் தொடங்கியது. (என்ன நோய் என மறந்துவிட்டது.) மருத்துவ்ராக இருந்து பலரை காப்பாற்றிய நோஸ்ராடாமஸால் அவரது குடும்பத்தை காப்பாற்ற முடியவில்லை. தனது மனைவி, பிள்ளைகளை இழந்தார். இவ்விழப்புகளுக்கு பின்னர் ஒரு நாடோடியாக மாறினார். நாடோடியாக இருந்த வேளையில் ஒரு பாதிரியாரின் நட்பு கிடைத்தது. அவரிடம் சீடராக பணியாற்றிய காலப்பகுதியில் நோஸ்ராடாமஸின் மனநிலையில் பெரும் மாற்றங்கள் நிகழத்தொடங்கியது. தனியாக இருந்து நீண்ட நேரம் வானத்தை உற்றுப் பார்க்க தொடங்கினார். யாரையாவது பார்த்து ஏதாவது சொல்ல அது கச்சிதமாக நடந்தது.

நோஸ்ராடாமஸ் புகழ் பரவ ஆரம்பித்தது. கூடவே பிரச்சினைகளும் கத்தோலிக்க திருச்சபையின் பார்வையில் இவரின் ஆரூடங்கள் சாத்தானின் எச்சரிக்கைகளாகப்பட்டன. எனவே நோஸ்ராடாமஸ் மீது திருச்சபையால் குற்றம் சுமத்தப்பட்டது. இப்பிரச்சினைகளால் நோஸ்ராடாமஸ் தலைமறைவானார்.

நோஸ்ராடாமஸ் தனது செய்யுள்களை குழப்பமான கவிதை வடிவில் எழுதியமைக்கும் இதுவே காரணம். இவரது படைப்பான லெஸ் புரோபெடீஸ் மூலம் நன்கு அறியப்பட்டவராக விளங்கும் இவரது இப்படைப்பு 1555 அன்று முதன் முதலில் அச்சடிக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.

இப்புத்தகப்படைப்பின் மூலம் பிரபலமடைந்த நோஸ்ராடாமஸ் பெரும்பாலும் அவரின் இறப்பிற்குப் பின்னரே உலக மக்களால் அறியப்பட்டார்.

நோஸ்ராடாமஸ் அவரது புத்தகப் படைப்புக்களில் சிறப்பாகக் கருதப்படும் இப்புத்தகத்தில் உலகில் நடைபெற்ற நடைபெற விருக்கும் நிகழ்வுகள் மற்றும் பல சம்பவங்களில் முக்கியமானவற்றை அன்றைய காலகட்டங்களிலேயே எழுதியவராக அனைவராலும் அறியப்படுகின்றார். இருப்பினும் இவரது குறி சொல்லும் ஆற்றல் பல கடின முயற்சிகளின் பின்னரே அறியக் கூடும் எனப் பலரும் மேலும் சிலர் இவ்வாறான கூற்றுக்கள் யாராலும் கண்டுபிடிக்க முடியாத வகையினால் குறி சொல்லப்பட்டிருக்கின்றது எனவும் கூறுகின்றனர்.



# நயினை நாகபூஷணி தேர்த்திருவிழா சிறப்பு

பாரம்பரிய பட்டுக்களின் பரந்த சோலை
காவேரி சில்க்ஸ்
இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாரம்பரிய பட்டுக்கள், புத்தம் புதிய நவீனரக சல்வார்கள், பஞ்சாபிகள் மற்றும் அனைத்து தரப்பினருக்குமான ஆடை வகைகளும் நியாயமான விலைகளில் கிடைக்கும் ஓரே இடம்.
48, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 2333
திருமணப்பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்

மைதிலி நகை மாடம்
89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7902
யாழ்.மைதிலி ஜுவலரி
79Z, செட்டியார் தெரு, கொழும்பு-11.
0112396239

றூபா பன்முக வர்த்தகம்
Colombo-office:
176A,central Road,
colombo-12
Tel:0115-8302147,0115-83219
fax:0112392412
இல.104A ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
Tel:-0212228330
Fax:-021-2227036

அதிநவீன ஆடைத்தெரிவுகளுக்கு....
ஸ்ரைல் பார்க்
Style park
171, K.K.S Road,
Jaffna.

GTV ENTERPRISES PVT LTD
Maharaja Food Products, Vijeya Enterprises, SriLankan Airlines Cargo Agent
DHL SriLankan Cargo aramex
உள்நாட்டுப் பொதிகள்,ஆவணங்கள் ஒப்படைத்த மறுதினம் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
NO. 225, Kasthuriyar Road, Jaffna. Tel-021 222 4338
No.272,K.K.S. Road, Jaffna. Tel-021 222 4825

சாதுகா நகையகம்
இல.200G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 3700

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் இன்று இரதோற்சவம். அருள் சுரக்கும் அம்பிகையானவள் இந்த நயினையம்பதியிலே நாகேஸ்வரி எனும் நாமத்துடன் கோயில் கொண்டெழுந்தருளி வழிபடும் அடியார்களின் மனக்கவலை மாற்றி அருளாட்சி புரிந்து கொண்டிருக்கின்றாள்.

வருடாந்தம் மஹோற்சவத்தில் தேர்த்திருவிழா அழித்தலை குறிப்பதாகும். அடியார்களின் துன்பங்கள் யாவற்றையும் அழித்தொழிப்பதற்காக இன்று அம்பிகை சித்திரத் தேரிலே சிங்காரப் பவனிவருகின்றாள்.

தம்முடைய அருமைச் செல்வங்களான விநாயகர், வேலவர் சகிதம் அம்பாள் அருள் பொழியும் திருவதனத்துடன் அலங்காரபூஜிதையாக அற்புதக் காட்சி தரும் ஆனந்த கோலாகலம் சொல்லி அடங்காது.

ஆதலால் இன்றைய தேர்த்திருவிழா நன்னாளில் அம்பிகையின் திருப்பாதகமலம் பணிந்து வணங்குவதுடன் வணங்கி நிற்கும் அடியார்கள் அனைவருக்கும் சகல சௌபாக்கியங்களும் நிறைந்த சந்தோஷ சகவாழ்வு கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று அம்பிகையின் பொற்பாத கமலங்களைச் சிந்தித்து வந்தித்துச் சேவை செய்ய வேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

உங்களது பாவ வினையகல உலகமாதாவாகிய உமையாள் ஸ்ரீ நாகபூஷணியை வேண்டிப் பணியும் வண்ணம் அன்போடு வேண்டுகின்றோம்.


"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹாசந்நிதானம்,
நல்லை ஞானசம்பந்த ஆதீனம்,
யாழ்ப்பாணம்.

## மணித்தீவில் தேரேறி வருவாயம்மா

மணித்தீவில் தேரேறி வருவாயம்மா
மனமெல்லாம் நீ ஏறி அருள்வாயம்மா
நாங்கள் உனைத் தொழவே அமர்ந்தாயம்மா
நாகபூஷணியாய் பார்போற்ற நின்றாய் அம்மா
கலைமின்ன கோபுரத்தை ஈந்தாயம்மா
கவலைகள் பறந்தோடவழி சொல்வாயம்மா
சித்திரம் நிறைதேரில் எழுந்தருள்வாயம்மா
சித்தமது குளிர்ந்திடவே செய்வாயம்மா
அல்லல்கள் பறந்தோட வரம் தருவாயம்மா
அகிலாண்ட நாயகியாய்துணை நிற்பாயம்மா
தாய் என்றால் சேயென்றெமை காப்பாயம்மா
தயாபரி நாகம்மை தேரேறி வலம் வருவாயம்மா

நயினை
த.பாலமுருகன்





## நாகம் பூசித்த நாகபூஷணி அம்மன்



எமது குலதெய்வம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனுக்கு இன்று தேர்த்திருவிழா.வரலாற்றுச் சிறப்பும் வழிபாட்டுச் சிறப்பும் ஒருங்கே கொண்டுள்ள சக்தி பீடம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம் ஆகும்.

ஆதியில் நாகம் பூசித்த அம்மன் என்னும் காரணத்தினால் நாகபூஷணி அம்மன் என இன்றும் அடியார்களால் அழைக்கப்படுகின்றாள்.

நந்தன வருட உயர் திருவிழா இவ்வாண்டு நடைபெற்ற 108 அடி நவதள இராஜகோபுர பெரும் சாந்தி விழாவின் பின்னர் நடைபெறும் முதற் பெருவிழாவாகும். அடியார்களை ஈர்த்து ஆட்கொள்ளும் அதிசய தெய்வம் ஸ்ரீநாகபூஷணி அம்மன் என்றால் மிகையில்லை. அடியார்களின் கனவிலும் நனவிலும் நாகமாக காட்சி கொடுத்து அருளுபவள் நாகம்மை.

மூலஸ்தானத்தில் உள்ள சுயம்புருவமும் நாக வடிவிலேயே அமைந்துள்ளது. இதனால் போலும் நாகதோஷம் செய்யும் அடியார்கள் இங்கு வந்து நேர்த்தியை நிறைவேற்றி அருள் பெற்றுச் செல்கின்றனர். அம்பாளின் பேரருள் அனைவருக்கும் கிடைப்பதுடன் நாட்டில் யாவும் நலமே நிறைவேற அன்னையைப் பிரார்த்திக் கின்றேன்.


கு.சரவணபவானந்தன் J.P,
மரபுவழி அறங்காவலர்,
முன்னாள் செயலாளர்,
கோட்டக் கல்விப்பணிப்பாளர்.


பூலோகம் உய்வுபெற புவனேஸ்வரியே வரமருள்வாய்
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
International Courier & Cargo Service
இல. 01, பிறவுண் வீதி நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். தொ. இல : 021 222 6113

# ஷணி அம்மன் ஆலய
# பு மலர் - 02.07.2012







## அன்னையின் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைக்கட்டும்



"போற்றி என் வாழ்முதலாகிய பொருளே போற்றி"

சக்திபீடங்களின் மகத்துவத்தை உலகறிய வேண்டும் என்று அவதாரம் எடுத்தவர் ஆதிசங்கரர். இவரின் வழியில் அவரால் வெளிப்படுத்தப்பட்ட இடங்கள் தோறும் சென்று சக்திபீடங்களை மக்கள் அறிய வெளிப்படுத்தியவர்கள் தான் சக்தி உபாசகர்களாகிய பட்டர்கள். இந்தவகையில் நாகநாட்டில் ஸ்ரீ புவனேஸ்வரி பீடம் அமைந்துள்ளதை அறிந்து இலங்கையின் வடபால் அமைந்துள்ள தீவுகளில் ஒன்றான நயினாதீவு என்ற மணிபல்லவத்திற்கு வந்தபோது அதி அற்புத தோற்றத்துடன் அமையப்பெற்ற மணி பீடத்தையும் சுயம்பு வடிவான (நாக) குண்டலினி முகூர்த்தத்தையும் கண்டு அதிசயித்து இதுதான் ஸ்ரீ புவனேஸ்வரி பீடம் என்ற முடிபுடன் மீண்டும் தமிழ்நாட்டிற்கு சென்று தாம் கண்ட தெய்வீக தரிசனத்தையும் நாகர்களின் வழிபாட்டு முறைகளையும் அவர்களின் தோற்ற அமைப்புக்களையும் எடுத்துக் கூறியதாகவும் வரலாறுகள் உண்டு.

பல வீதிகளுடன் மாடங்கள், கோபுரங்கள், நந்தவனங்கள், மடங்களுடன் அமைந்திருந்த இந்த ஆலயத்தை நாடு பிடிக்க வந்த பிற தேசிகளான போர்த்துக்கீசர், டச்சுக்காரர்கள் என்போர் இடித்து சேதமாக்கிய சொத்துக்களையும் சூறையாடிச் சென்ற வரலாறுகளும் உண்டு. இப்படியான சூழ்நிலையில் டச்சுக்காரர்களால் சேதமாக்கிய ஆலயத்தை 1788 இல் எமது மூதாதையரான இராமலிங்கர் இராமச்சந்திரர் என்பவர் மீளக் கட்டி புனரமைத்து பரிபாலனம் செய்து வந்ததாக வரலாற்று பதிவு உள்ளது.

அன்று அம்பாளின் ஆலயம் நாகரிகத்தில் மிக்கவர்களான நாகரின் பரிபாலனத்தில் எவ்விதமான அழகுத் தோற்றம் கொண்டதாக அமைந்திருக்குமோ என்ற எண்ணக்கருவை கருத்தில் கொண்டு இன்று 108 அடி உயர வானுயர் கோபுரத்தையும் கிழக்கு, தெற்கு வீதிகளில் மூன்று கோபுரங்களையும் அழகிய சிற்பங்கள் புற வீதியிலும் உள் வீதியிலும் வெளிமாடங்களிலும் பண்டிகைகளையும் உள்வீதியில் வர்ணமயமான வரலாற்றுப் படைப்பான ஓவியங்களையும் பக்திமயமான திருமுறைப்பாடல்களையும் அறுபத்துமூவரின் திருவுருங்களையும் கொண்ட ஒரு தெய்வீக கலைக் கோயிலாக மிளிர்கின்றது என்றால் மிகையாகாது.

இத் திருத்தலத்தில் இன்று (02.07.2012) அம்பாளின் உயர் திருவிழாவின் அதிபக்திமயமான விழாவான தேர்த்திருவிழா நடைபெறும். உலகெங்கும் பரந்த அளவில் வாழும் அம்பிகையின் அடியார்கள் தம் இல்லங்கள் தோறும் அம்பிகையை வேண்டி பிரார்த்தனை செய்தபடி இருப்பார்கள் என்பது உண்மை. இவர்களுக்கு எம் தாயின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்தித்து ஆசியையும் கூறுகின்றேன்.

"தாயே ஆகி வர்த்தனை போற்றி"

ஆ.தியாகராஜா
தலைவர்,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

மலரமைப்பு:-
நயினை லவன்

## பிரதம குருவின் ஆசிச்செய்தி



எல்லாம்வல்ல அருவளர் ஸ்ரீ புவனேஸ்வரி பீடத்தை அலங்கரித்து அருளாட்சி செய்துவரும் அகிலாண்டநாயகி பிரமாண்டதேவி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் எல்லா ஜீவராசிகளுக்கும் தாயாகி நின்று அருள் புரிகின்றாள். சென்ற கரவருடம் தைமாதம் 29 ஆம் திகதி 33 ஓமகுண்டலங்களோடு கூடிய மஹா கும்பாபிஷேக பெருஞ் சாந்தி பெருவிழா நடைபெற்று மந்திர சிம்மாசனத்தில் அமர்ந்து பக்தர்களுக்கு தனது கடைக்கண் பார்வையினூடு அருளாட்சி செய்யும் ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் மஹோற்சவமானது கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று இரதோற்சவம் நடைபெறுகின்றது. வெகு விமரிசையாக அடியார்களின் கூட்டத்தின்நடுவே தெப்பமாக மிதந்து ஆனந்த நடனம் புரிந்துவரும் அந்த அழகு கற்பனைக்கு எட்டாது.

கருணை வடிந்தோடும் அம்மனின் திருமுகத்தை கண்டு தரிசித்ததோடு அவளது திருத்தேரின் வடத்தை பிடித்து இப்பூவுலகில் எடுத்த பிறவிப் பயனைப் பெறுவோமாக.

தர்மம், அர்த்தம், காமியம், மோட்சம் எனும் புரு ஷோத்தங்களையும் அடைந்து சகல செல்வங்களையும் பெற்று பெருவாழ்வு வாழ அம்பிகையை பிரார்த்திப்போம்.

*ஸர்வேஜனா சுகினோ பவந்து*

சாகித்திய சிரோன்மணி
நயினைக்குருமணி சிவஸ்ரீ
ப.முத்துக்குமாரசாமி
சிவாச்சாரியார்.

அகிலம் ஆளும் நாகபூஷணித்தாயே எம்மைக் காத்திடம்மா
உதயா ஜுவல்லர்ஸ்
Uthayaa Jewellerss
இல 81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
No.81, Kasthuriar Road, Jaffna
T.P:-021 222 4434

பக்தனுக்கு அருள்புரியும் பார்வதியே வந்திடம்மா
தரமான கட்டிட பொருட்களை பெற்றுக் கொள்ள
கஜமுகன் ஹாட்வெயர்
147,149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2833

சிறி நதியா நகை மாளிகை & டிஜிட்டல் கலர்லாப்
56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:-021 222 6744
இல.108A, லக்ஸன் பிளாசா கட்டடம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:-021 222 8412

அகிலமாளும் அன்னையின் ஆசி அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்
SDS COMPUTER SERVICES -JAFFNA
#42/1, College Road, Jaffna.
Tel:-021 510 0105
fax:-021 222 4500

சிறி மதனா நகை மாளிகை
155/M, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே:-021 222 7772
கிளை நிறுவனம் மதனா ஜுவல்லரி
177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 5526

WESTERN UNION MONEY TRANSFER
நாகபூஷணித்தாயே எம்மைக் காத்திடம்மா
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY
POST OFFICE
#303 K.K.S Road, Jaffna,
Tel:-0212225392
0212222670
Fax:-021-2223214
e-mail:srimurugan09@gmail.com
web:srimurugan@eureka.lk

சிறி மீனாட்சி நகைமாடம்
183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 6109

DHL
நாகபூஷணித்தாயே எம்மைக் காத்திடம்மா
திருமுருகன் கொம் நெற்
உள்ளூர், வெளிநாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள், பொதிகள் சேவை
இல.259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல.46, ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம்.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி,
இல.05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு.

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா சிறப்பு மலர்- 02.07.2012




வேல் முருகன் வாணிப நிலையம்

VELMURUGAN TRADERS

தற்கால நவநாகரிக கட்டடங்களுக்கு ஏற்ப சகல விதமான வர்ண பெயின்ட் வகைகளும், சுண்ணாம்பு மற்றும் கட்டடப் பொருள் விற்பனையாளர்.

இல.56A,295A மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 9437

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்

அசோகா நகை அகம்

இல:111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 6290

நம்பிக்கை நாணயம்-உத்தரவாதம்

22 கரட் தங்க நகைகளுக்கு

ASOKA JEWELERS





ஆர். வி.ஜி R.V.G

மருந்தகம்

504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.

தொ.பே.இல: 021 222 2129

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

ஸ்தாபனம்

58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தொ. பே. இல : 021 222 6806

உடல் வளர்ச்சிக்கு

ஜீவாகாரம்

உள்ளூர் உற்பத்தியான ஜீவாகாரம் சிறியோர் முதல் பெரியோர் வரை பாவிக்க உகந்தசத்துணவு. இரசாயனக் கலவை அற்றது




உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது

அன்னா தயாரிப்புக்களே!

| | |
|---|---|
| அன்னா கோப்பி | அன்னா மிளகாய்த் தூள் வகைகள் |
| அன்னா அரிசி மா | அன்னா பத்தி வகைகள் |
| குரக்கன் மா | அன்னா பற்பொடி |
| ஆட்டா மா | அன்னா இனிப்பு வகைகள் |

அன்னா தொழிலகம் இணுவில்

தொலைபேசி இல: 021 224 1565


## மங்களமாய் வலம் வருவாய் மக்கள் மனம் மகிழ்ந்திடவே....

நாகமதில் ஏறி பவனி வரும் நாயகியே
நாகபூசணியாய் நயினையில் அமர்ந்தவளே
நாடிவரும் பக்தர்கள் துன்பம் தீர்ப்பவளே
வரலாற்று சிறப்பு மிக்க
அழகிய ரதம் தனில் நீ வலம் வர
உன் பக்தர்கள் நின் புகழ்பாடி
மங்களமாய் வலம் வருவாய்
மக்கள் மனம் மகிழ்ந்திடாயோ...!



தென்கோவையூர்
ம.நிரோஷனா


பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் துல்லியமான பார்வையைப் பெற்றிட, பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்னரைவிட உறுதியான, அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிட- இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட

கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.

எரிக்கணேஷ்

மூக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்

இல 564,566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே:021 222 2486

கிளைகள்:

பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல 80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

இல.91, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.



# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய
# தேர்த்திருவிழா சிறப்பு மலர் – 02.07.2012


## L கிருபா லேணர்ஸ் L

(அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை)



- குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தி அடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- தாம் விரும்பிய நேரங்களில் வாகன பயிற்சி வழங்கப்படும்.

**தலைமைக் காரியாலயம்:–**
**226, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம். T.P:- 021 222 4353**

கிளை :– சுன்னாகம்
கே.கே.எஸ். வீதி,
மதவடி முன்பாக
T.P:- 0212242022
0714546956

கிளை :- A-9 வீதி, சாவகச்சேரி
T.P:- 021 492 3202,
021 320 1818

கிளை :- கிளிநொச்சி
T.P:- 021 228 5505

கிளை :- நெல்லியடி
T.P:- 021 300 6550

கிளை :- விசுவமடு
T.P:- 021 320 1515


## 53 ஆண்டுகளாக அடியார்களுக்கு சேவையாற்றும்

## அமுதசுரபி அன்னதான சபை



# நவாலி அட்டகிரி கந்தசுவாமி தேவஸ்தான இரதோற்சவ சிறப்புமலர் 02.07.2012

## ஆலய பிரதமகுருவின் ஆசிச்செய்தி





நவாலியூரிலே குருக்கள் கோவில் எனப் போற்றப்படும் அட்டகிரிப்பதியிலே எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானுக்கு இன்று இரதோற்சவம் நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன். மும்மலங் களையும் அழிக்கும் சக்தி பொருந்திய சண்முகப்பெருமான் மகாவல்லி கஜவல்லியோடு புதிதாக மெருகூட்டப்பட்ட அழகிய சித்திரத் தேரில் எழுந்தருளும் காட்சியைக் காண வரும் பக்தர்களுக்கு எல்லாம் வல்ல சண்முகப் பெருமான் அருள் கிடைக்க பிரார்த்தித்து அமைகின்றேன்.

அடிநாடிப் பணிவார்தம் அகம் இருப்பான் -ஐயன்

அருள் தந்து எமைக்காப்பான் அட்டகிரியான்

**சிவஸ்ரீ கா.துரைசாமிக்குருக்கள்,**
**ஆலயபிரதமகுரு,**
**மஹோற்சவ குரு**





## வேல் கொண்டு வெவ்வினையை வேரறுத்த எம் வேலன்....

நவாலி அட்டகிரிப் பகுதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் கலியுகவரதன் முருகனுக்கு இன்று தேர்த்திருவிழா நடைபெற திருவருள் கிட்டியுள்ளது. அழகிய சித்திரத் தேரில் ஆரோகணித்து வரும் எம்பெருமானின் அற்புதக் காட்சியை காண நாம் பெரும் பாக்கியம் செய்திருக்க வேண்டும்.

அடியார்களின் துன்பங்களைக் களைந்து இன்பங்களை தரும் தேர்த்திருவிழா மஹோற்சவத்தில் ஒரு முக்கிய இடம் வகிக்கின்றது.

அழித்தலைக் குறித்து நிற்கும் இன்றைய தேர் உற்சவம் அடியார்களின் இடர் போக்கும் சிறந்த உற்சவமாகும்.அடியார்கள் பக்தியுடன் வடம் பிடித்திழுக்க மங்கள இசை வானைப்பிளக்க முருகப் பெருமான் தேரேறி வரும் காட்சியை காண கண்கோடி வேண்டும்.

**தர்மகர்த்தா சபை**
**நவாலி அட்டகிரி**
**கந்தசுவாமி தேவஸ்தானம்.**

## தேர் உணர்த்தும் தத்துவம்

தேர்த்திருவிழா நடைபெறவிருக்கும் இந்த நன்னாளில் தேர் உணர்த்தும் தத்துவம் என்ன என்பதைப்பற்றி சிறிது சிந்திப்போம். உலகத்தையே தேராகக் கொண்டு இறைவன் வலம் வருகின்றான் என்பதையே தேர்த்திருவிழா விளக்குகின்றது.

தேரிற் காணப்படும் நான்கு குதிரைகளும் நான்கு வேதங்களைக் குறிப்பிடுகின்றன. பிரம்மதேவனே இத்தேருக்குச் சாரதியாக விளங்குகின்றான். பூமியாகிய இந்தத் தேருக்குச் சூரிய, சந்திரர் சக்கரங்களாக அமைந்துள்ளனர்.

சூரியன் அசுத்தத்தைப் போக்குவான். சந்திரன் மகிழ்ச்சியை அளிப்பான். ஆணவம், கன்மம், மாயை என்று சொல்லப்படுகின்ற மும்மலங்களையும் அழிப்பதையே நோக்காகக் கொண்டு இறைவன் தேரூந்து வருகின்றான் என்று பல நூல்கள் தேர்த்திருவிழாவின் தத்துவத்தினை எடுத்து இயம்புகின்றன.

### சரவண பவ எனும் நாமம்!

பால்காவடி பன்னீர் காவடி புஸ்பக்காவடி
மா்ல்மருகன் முருகனுக்கு மச்சக் காவடி
எத்தனையோ காவடிகள் திருக் குமரன்
சந்நதியில்
அத்தனையும் வினை தீர்க்கும் ஐயமே
இல்லை...!!
சரவணபவ எனும் நாமம்
குலச்சுடர் ஒளிதனை ஏற்றும்
நலம் தரும் நம்பிக்கை வளர்க்கும்
உலகினில் இன்பங்கள் பெருக்கும்
இடர் வரும் திசைதனில் ஒலிக்க -அவை
பயம்கொண்டோடிட விரட்டும்
திருமறை தந்திட்ட வேதம் -அதுவே
சரவண பவ
எனும் நாமம்!!!

### முத்தமிழ் வேந்தன்



*சிங்கார வேலன்*
*சிவசக்தி பாலன்*
*மங்காத தீபம்*
*மாமலையின் ஜோதி*
*தத்துவம் புகட்டிடும்*
*உத்தம ரூபன்*
*நற்றமிழ் தந்திடும்*
*முத்தமிழ் வேந்தன்*
*ஓம் சரவண பவ!!!*






சிறி தேவி கருமாரி நகை மாடம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

83/01, கஸ்தூரியார் வீதி,
செம்மாதெரு, யாழ்ப்பாணம்.

தொ.பே:-0773604712

சுந்தர்சன்

இலத்திரனியல் சாதனங்களை இறக்குமதி செய்பவர்களும், விநியோகத்தர்களும் ...

யாழ் வீதி , மானிப்பாய்

sundharsan@yahoo.co.uk

T.P./Fax :- 021 225 5136

# திருமுறிகண்டி திரும்புமா..? சிறைவாழ்வு தொடருமா...?

2010 ஆம் ஆண்டு முந்தல்வெளி என்னும் இடத்திற்கு நிகழ்வு ஒன்றிற்கு வருகை தந்த இலங்கையின் ஜனாதிபதி மகிந்த இராஜபக்ஷவிடம் திருமுறிகண்டி பிரதேச மக்கள் "எமது காணியை எப்போது எங்களிடம் ஒப்படைப்பீர்கள்" என்று கேட்டனர். அதற்கு ஜனாதிபதி கூறிய உறுதி மொழி "இறந்த உயிர்கள் தவிர்ந்த அனைத்து உடமைகளும் விரைவில் உங்களிடம் ஒப்படைக்கப்படும்" என்று உறுதியாகக் கூறினார்.


அதன்பின் 2010 ஆம் ஆண்டு தற்போதைய மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் திருமுறிகண்டி இந்துக்கல்லூரி திறப்பு விழாவிற்கு வருகை தந்திருந்தார். அவரிடம் திருமுறிகண்டி மக்கள் தமது காணியை தங்களுக்கே மீண்டும் வழங்குவதற்கு உதவி செய்யுமாறு கேட்டனர். அதற்கு முரளிதரன் கூறிய ஆறுதல் வார்த்தை.

"உங்களுடைய 300 ஏக்கர் காணியை மீண்டும் உங்களுக்கே வழங்குவது தொடர்பாக உயர்மட்டக் குழுக்களுடன் கலந்துரையாடி தீர்க்கமான முடிவொன்றைப் பெற்றுத்தருவேன்" என்று கூறினார். 2010 ஆம் ஆண்டு வவுனியா இந்துக் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற காணி தொடர்பான ஒன்றுகூடலில் கலந்துகொண்ட இந்திய வெளி விவகார அமைச்சின் செயலாளர் நிருபமா ராவிடமும் தமது காணியை இராணுவத்திடமிருந்து மீட்டுத் தருவதற்கான கோரிக்கைக் கடிதம் ஒன்றினை வழங்கினர்.

2011 ஆம் ஆண்டு முறிகண்டி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் திறப்பு விழாவிற்கு வருகை தந்திருந்த அமைச்சரிடமும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரிடமும் திருமுறிகண்டி மக்கள் தமது காணியை இராணுவத்திடமிருந்து மீட்டுத் தருமாறு கோரிக்கைக் கடிதம் ஒன்றினைக் கொடுத்தனர். அதற்கு அமைச்சர் "மேலிடத்தில் பேசி உங்களுடைய காணியை மீட்டுத் தருவதற்கு முயற்சி செய்கிறேன்" என்று கூறினார்.

தொடர்ந்து தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரிடமும் தமது காணியில் விரைவில் மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கைக் கடிதம் வழங்கினர்கள். 2011 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முல்லைத்தீவு அரச அதிபரிடம் திருமுறிகண்டிப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தங்கள் காணிகளில் எப்போது மீள்குடியேற்றுவீர்கள் என்று கேட்டனர். அதற்கு அப்போதைய ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் கூறிய பதில், "உங்களுடைய 300 ஏக்கர் காணி இராணுவத் தேவைக்காக பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதன் காரணத்தினால் உங்களுடைய காணிக்குப் பதிலாக கொக்காவில் பகுதியில் கண்ணி வெடி அகற்றப்பட்டவுடன் காணிகள் வழங்கப்படும்" என்பதாகும்.

2011 ஆண்டு காலப்பகுதியில் கொக்காவில் தொலைத்தொடர்பு கோபுரத் திறப்புவிழாவிற்கு வருகை தந்திருந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் திருமுறிகண்டிப் பிரதேசத்தில் மீள்குடியேற்றப்படாத, பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் ஜனாதிபதியிடம் தமது காணிகளை எப்போது தருவீர்கள் என்று கேட்டனர். அதற்கு ஜனாதிபதி




தமிழில் "தறளாம்...தறளாம்..." என்று கூறினார் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அதன்பின் 2011.12.29 ஆம் திகதி கிளிநொச்சி நிகழ்வொன்றிற்கு வருகை தந்திருந்த நாமல் ராஜபக்ஷ மற்றும் வடமாகாண ஆளுநர் ஆகியோரிடம் "எமது காணியை எங்களிடம் ஒப்படைத்து, எப்போது எங்களை மீள்குடியேற்றம் செய்வீர்கள்" என்று கேட்டனர். அதற்கு அவர்கள் கூறிய பதில், "உங்களுடைய காணிகள் இராணுவத் தேவைக்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே உங்களுடைய காணிக்குப் பதிலாக மாற்றுக் காணிகள் விரைவில் வழங்கப்படும்" என்பதாகும்.

எவ்வாறாயினும் தமது சொந்த நிலங்கள் ஆயுதப் படையின் ஆக்கிரமிப்பில் இருக்க, நலன்புரி நிலையங்களிலும் பிறரது காணிகளிலும் தங்கியிருந்து தினம் தினம் வேதனை

## எங்கள் நிலத்தை ...! எங்களிடமே தாருங்கள்...!



யையும் துன்பங்களையும் அனுபவித்து, தமது சாதாரண வாழ்க்கை, உடல்நலம், சமூக- பண்பாடு, குடியியற்செயற்பாடுகளில் பங்குபற்றும் வாய்ப்புகள், கல்வி, குடும்ப ஒருங்கிணைப்பு என யாவற்றையும் தொலைத்து, நடைப்பிணங்களாகத் தங்கியுள்ள திருமுறிகண்டி கிழக்கைச் சேர்ந்த மக்களின் சொந்தக் காணியில் மீள்குடியேறும் கனவு அவர்களுக்கு இன்னும் வெறும் கனவாகவே உள்ளது.

இந்நிலையில், திருமுறிகண்டி மக்கள் மீள்குடியேற்றப்படுவது தொடர்பான ஒன்றுகூடல், 14.06.2012 ஆம் திகதி பிற்பகல் 2.30- 3.30 திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர், காணி உத்தியோகத்தர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர், யு.என்.எச்.சி.ஆர். உத்தியோகத்தர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதி போன்றோர். கலந்துகொண்டனர். அத்தோடு வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் திருமுறிகண்டி மக்கள் இராணுவத்தால் பேருந்தில் ஏற்றிவரப்பட்டனர்.

இவ்வொன்று கூடலில் திருமுறிகண்டி மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. கடந்த 23.06.2012 ஆம் திகதி அன்று வவுனியா செட்டிக்குளம் இடைத்தங்கல் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் 46 குடும்பங்களை திருமுறிகண்டியிலிருந்து கிளிநொச்சி செல்லும் ஏ-9 வீதிக்குக் கிழக்கே குடியேற்றுவதாக ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் கூறியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து குறித்த திருமுறிகண்டி மக்கள் தமது காணிகளை தமக்கு வழங்கினால் மட்டுமே மீள்குடியேறுவோம் எனக்கூறி எதிர்ப்புத் தெரிவித்தபோதும் அதனையும் பொருட்படுத்தாமல் 23.06.2012 அன்று இடைத்தங்கல் முகாங்களில் தங்கியிருக்கும் 46 குடும்பங்களையும் மீள்குடியேற்றப்படவுள்ளனர் என தெரிவித்தனர்.

இந்த 47 குடும்பங்களையும் உறவினர் வீடுகளில் தங்கியிருக்கும் 33 குடும்பங்களையும் மீள் குடியேற்றப்போவதாகவும் ஊடகங்களிற்கு செய்தி பிரசுரிக்கப்பட்டு திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் ஒன்று கூடல் ஏற்பாடு செய்து அங்கு வணிகத் தொழில் அமைச்சர், தனியார் போக்குவரத்து அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண ஆளுநர், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் கலந்துகொண்டு திருமுறிகண்டி மக்களுக்கு காணி ஆவணங்கள் வழங்கப்பட்டதுடன் தற்காலிக குடியிருப்புகளை அமைப்பதற்காக 94 இலட்சம் ரூபா நிதியும் வழங்கப்பட்டுள்ளது என்று ஊடகங்களில் செய்திகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

மூன்று வருடங்களாக நலன் புரி நிலையங்களில் தங்கவைக்கப் பட்டிருந்த திருமுறிகண்டி மக்களை மீள் குடியேற்றுவதற்காக கொண்டுவரப்பட்டு, திருமுறிகண்டி இந்து வித்தியாலயப் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். நலன்புரி நிலையத்திலிருந்து கொண்டுவரப்பட்ட 46 குடும்பங்களில் 27 குடும்பங்களை அவர்களது காணிகளிலேயே குடியேற்றிவிட்டனர். மீதமாகவுள்ள 19 குடும்பங்கள் மீண்டும் மெனிக் ஃப்பாம் முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

**வன்னியன்**
**நன்றி: இணையம்**

இந்த 19 குடும்பத்தினரை அவர்களது காணியை வழங்காமல் அதற்கு பதிலாக திருமுறிகண்டியில் இருந்து கிளிநொச்சி செல்லும் ஏ-9 வீதிக்கு கிழக்கேஒரு குடும்பத்தினருக்கு 1/4 ஏக்கர் வீதம் வழங்கி, 25.06.2012 அன்று காணிக்குள் செல்லுமாறு இராணுவத்தினரும் பொலிசாரும் வற்புறுத்தினர்.

இதற்கு அனைவரும் எதிர்ப்புத் தெரிவித்து தங்களுடைய காணியை தமக்கு வழங்கினால் மாத்திரமே மீள் குடியேற சம்மதிப்போம் என்றும் மாறாக வேறு எப்பகுதியிலும் குடியேறத் தயாரில்லை என்றும் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்தவர்களில் ஒருசில நபரை இராணுவத்தினர் தனியாக அழைத்துச்சென்று அடித்து விசாரணை செய்தனர். இவர்களில் ஒருவர் ஏற்கனவே இதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்தமையால் மாரடைப்பு ஏற்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

தொடர்ந்து 26.06.2012 அன்று நில ஆக்கிரமிப்பிற்கு எதிராக தமிழத் தேசியக்கூட்டமைப்பினால் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. மீள் குடியேற்றம் என பெரும் எடுப்பில் பிரசாரம் செய்யப்பட்டபோதிலும் திருமுறிகண்டி மக்கள் மீண்டும் மெக் ஃபாம் சிறை வாழ்க்கைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். (முற்றும்)

# இரத்துச் செய்யப்பட்ட சட்டவிதிகளின் கீழ் ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டனர்

## கொழும்பு நீதிமன்றில் சட்டத்தரணிவாதம்

(கொழும்பு)

இலங்கையில் கைது செய்யப்பட்ட ஸ்ரீ லங்கா மிரர் செய்தி இணையத்தள ஊடகவியலாளர்கள் உட்பட 8 சந்தேக நபர்களுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியது.

கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட இவர்கள் நேற்று முன்தினம் பகல் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இலங்கை அரசாங்கத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தக்கூடிய விதத்தில் இவர்கள் செய்திகளை வெளியிட்டதாக நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்த அறிக்கையில் பொலிஸ் கூறியுள்ளது.

இலங்கை குற்றவியல் சட்டத்தில் உள்ள தண்டனை சட்டக்கோவையின் 115, 118, 120 ஆகிய பிரிவுகளில் பொலிஸாரின் கீழ் சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால், தண்டனை சட்டக்கோவையின் 118 ஆம் பிரிவு 2002 ஆம் ஆண்டிலேயே இலங்கை குற்றவியல் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டது என்று சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சாலிய பீரிஸ் சுட்டிக் காட்டுகிறார்.

இலங்கை பாராளுமன்றத்தால் இரத்துச் செய்யப்பட்ட சட்டவிதிகளின் கீழ் சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்திருப்பது செல்லாது என்று சட்டத்தரணி சாலிய பீரிஸ் வாதிட்டார்.

இந்த வாதங்களை ஏற்றுக் கொண்ட நீதவான் சந்தேக நபர்களை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு உத்தரவிட்டார்.

இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸாருக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஊடக சுதந்திரம் மீதான தாக்குதலாக இந்த கைது நடவடிக்கை கண்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கஞ்சா,பியர் விற்பனை; 15 ஆயிரம் அபராதம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் பிரதேசத்தில் பிரபல ஹேட்டல்களில் சட்டவிரோத பியர் விற்பனையில் ஈடுபட்ட மூன்று உரிமையாளர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் பொத்துவில் நீதிவான் நீதிமன்றம் தண்டப்பணம் விதித்துள்ளது.

இந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதி குறித்த ஹோட்டல் உரிமையாளர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபர தண்டப்பணம் விதித்ததுடன் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டிருந்த நான்கு பேருக்கு தலா 9 ஆயிரம் ரூபா வீதம் விதித்ததுடன் ஒருவர் நீதிமன்றில் ஆஜராகாததன் காரணமாக அவரை மன்றில் ஆஜராகுமாறும் பணிப்புரை விடுத்தார். (அ-2)

# நுளம்பு பரவும் வெற்று காணிகளை சுவீகரிக்க திட்டம்

நுளம்புகள் பரவும் வெற்றுக்காணிகளை அரசாங்கம் சுவீகரிப்பதற்கு தீர்மானித்துள்ளது. கொழும்பு நகர எல்லையில் மட்டும் இவ்வாறான 175 காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

கண்டி, காலி, கேகாலை போன்ற சன நெரிசல் மிக்க நகரங்க்ளில் இவ்வாறு நுளம்புகள் பரவக் கூடிய இடங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

உரிய முறையில் பராமரிக்கப்படாத எவரும் தங்காத இடங்களை இவ்வாறு சுவீகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பிலான சட்டங்கள் எதுவும் இதுவரையில் இயற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# எலும்புக்கூட்டை ஆராய கேம்பிரிட்ஜ் நிபுணர்கள் இலங்கைக்கு விஜயம்

பாஹியங்கலயில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய மனிதனின் எலும்புக்கூடு தொடர் பாக ஆராய்வதற்கு இங்கிலாந்தின் கேம்பி ரிட்ஜ் பல்கலைக்கழகத்தை சேர்ந்த உயிரியல் மானுடவியலாளர்கள்குழுவொன்றுஇலங்கைக்குவரவுள்ளது.

மேற்படி சடலத்தின் எச்சங்கள் தொடர்பாக இக்குழுவினர் உயர் தொழில்நுட்ப ஆய்வுகளை மேற்கொள்வர் என தொல்பொருள் திணைக்களத்தின் அகழ்வுப் பணிப்பாளரான கலாநிதி நிமல் பெரேரா கூறியுள்ளார்.

அத்துடன் மேற்படி சடலம் காணப்பட்ட பகுதிகளை சுற்றியுள்ள மண்ணின் மாதிரிகள் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள ஆய்வுகூடமொன்றுக்கு ஆய்வுகளுக்கு விரைவில் அனுப்பப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய மனிதனின் எலும்புக்கூடு எனக் கருதப்படும் மேற்படி எலும்புக்கூடானது களுத்துறையில் பாஹியங்கல பிரதேசத்தில் கடந்த 15 ஆம் திகதி கண்டு பிடிக்கப்பட்டது. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மனிதனின் முழுமையான எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டமை இதுவே முதல் தடவை என தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் தஸநாயக்க கூறினார். (அ-2)

# இந்தியாவின் 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தை மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்

## இந்தியா உதவ வேண்டும் என்கிறார் சந்திரகுமார் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

இந்தியா எமது நட்பு நாடு அந்நாட்டு அரசாங்கம் எம் மக்களின் அரசியல் நலனிலும் வாழ்வியல் மேம்பாட்டிலும் மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் இந்திய அரசாங்கம் எமது மக்களுக்கு வழங்கும் உதவித் திட்டங்களை நாம் நன்றியுடன் வரவேற்கின்றோம் என ஈ.பி.டி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்

யாழ்.வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 125 துவிச்சக்கரவண்டிகளை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடை பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு மக்கள் மீள்குடியேற்றப்பட்ட போது இந்திய அரசாங்கமே எம் மக்களுக்கு முதன்முதலாக உதவிகளை வழங்க முன்வந்தது. அதைத் தொடர்ந்து அவ் அரசாங்கம் தொடர்ச்சியாக யுத்த பாதிப்பை எதிர்கொண்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கும் தேசக்கட்டு மானத்திற்கும் என தொடர்ச்சியாக உதவி வருகின்றது.

ஆரம்பத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு தற்காலின இருப்பிடங்களை அமைப்பதற்கான உதவிகளை வழங்கிய இந்தியா அடுத்த கட்டமாக பாடசாலைகளை புனரமைக்கவும் வர்த்தக நிலையங்களை மீளமைக்கவும் உதவியது. தற்போது கிளிநொச்சியில் அமையப் பெறவுள்ள யாழ்.பல்கலைக்கழகத்தின் இரண்டு பீடங்களை அமைப்பதற்கு 500 மில்லியன் ரூபா வழங்கியுள்ளது. தொடர்ந்தும் அத்திட்டத்திற்கு உதவ தயாராகவுள்ளது. அத்தோடு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கை மீளமைக்கவும் குறித்த சில பகுதிகளில் புகையிரத வீதிகளை அமைப்பதற்கும் இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது.

எனவே, இந்திய அரசின் இவ் உதவித் திட்டங்களை எம் மக்கள் நன்றியுடன் ஏற்கின்றனர். இந்நிலையில் முற்றாக அழிந்த எம் தேசத்தில் மக்கள் மீண்டும் தம்மை நிலைப் படுத்திக் கொள்ள இவ் இந்திய அரசின் உதவிகளை தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றனர்.

இதேவேளை அவ் அரசாங்கத்தால் வாக்குறுதியளிக்கப்பட்ட ஐம்பதாயிரம் இந்திய வீட்டுத்திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் காலத்தையும் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

யுத்தம் வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் அனைவரினது வீடுகளையும் அழித்துவிட்டது. இன்று அவர்கள் தற்காலிக வாழ்விடங்களை அமைத்தே வாழ்கின்றனர்.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் சுமார் 25 ஆயிரத்துக்கு அதிகமான வீடுகள் அழிவுக்குள்ளாகியுள்ளன. (அ-2)



போசாக்கு சத்துணவு வாரத்தையொட்டி சசுகாதாரத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சி அண்மையில் பூநகரி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இக்கண்காட்சியில் பொதுச்சுகாதார பரிசோதகர் மாணவர்களுக்கு விளக்கமளிப்பதையும் கண்காட்சியினை பார்வையிடும் மாணவர்களினையும் படங்களில் காணலாம். (படங்கள் :-பூநகரிச் செய்தியாளர்)

# மாகாண சபை தேர்தல்களை நடத்த 600 மில்லியன் ரூபாய் செலவாகும்

## தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடத்தப்படவுள்ள கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்களுக்கு பொது மக்களின் 600 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்படவுள்ளதாக தேர்தல் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நிலையில் பல்வேறு கட்சிகளும் தமது வேட்பு மனுக்களை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 1, 8 அல்லது 15 ஆம் திகதி நடத்தப்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

அதிகமான வேட்பு மனுக்கள் கிடைக்கப் பெறுமாயின் தேர்தல்களை நடத்தும் திகதியை செப்டெம்பர் 15 ஆக தீர்மானிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# பொருளாதார அபிவிருத்தி மையம் அமைப்பது குறித்த கலந்துரையாடல்

(பூந்தோட்டம்)

தேசத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் வறுமையை ஒழிப்பதற்குமான பொருளாதார அபிவிருத்தி மையம் ஒன்றினை அமைப்பது தொடர்பான கலந்துரையாடலொன்று வவுனியா சுவர்க்கா ஹோட்டலில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

ஆசிரியர் சுதாகரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடல் வடக்குக் கிழக்கில் உள்ள பொருளாதார வளங்களை எவ்வகையினாலான பாவனைக்கு உட்படுத்துவதன் மூலம் வறுமையில் வாழும் தமிழ் மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பலாம் என்பது தொடர்பிலான கருப்பொருளில் அமைந்திருந்தது.

வவுனியா மாவட்டத்தில் பல்வேறு துறைசார்ந்த விற்பனையாளர்களை உள்ளடக்கி நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வடக்கு கிழக்கில் மண்வளம், நீர்வளம், கடல்வளம் மற்றும் ஏனைய உற்பத்தியாளர்களுடனான சாத்தியப்பாடுகள் தொடர்பில் பலரும் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

அத்துடன் புலம்பெயர் மக்களின் மூலமாக எவ்வாறு எமது பிரதேசங்களை பொருளாதாரத்தில் அபிவிருத்தி மாற்றத்தை காணச் செய்வது என்பது தொடர்பிலும் அதற்கான முதல் மூலோபாயங்கள் எவையாக உள்ளது எனவும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுமந்திரன், தமிழரசுக்கட்சியின் வவுனியா அமைப்பாளர் டேவிட் நாகநாதன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்தனர். (அ-9-266)

# முன்னாள் இராணுவ அதிகாரிகளை தேர்தலில் களமிறக்க ஐ.தே.க. திட்டம்

ஐக்கிய தேசியக் கட்சி முன்னாள் இராணுவ அதிகாரிகளை தேர்தலில் களமிறக்க திட்டமிட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தலின் போது வேட்பாளர்களை நிறுத்துவது குறித்து செயற்குழு ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று மாகாண சபைகளுக்கும் முன்னாள் இராணுவ அதிகாரிகளை நிறுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக துறைசார் பிரபலங்களையும் வேட்பாளர் பட்டியலில் இணைத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேட்பாளர் தெரிவு தொடர்பில் எதிர்வரும் 5 ஆம் திகதியே விசேட செயற்குழு கூட்டமொன்று நடைபெறவுள்ளது. (அ-2)

### இராஜகோபுர அங்குரார்ப்பண நிகழ்வு

கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான இராஜகோபுர அங்குரார்ப்பண நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 10.15 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

# சட்டமா அதிபராக பாலித நியமிக்கப்படலாம்?

சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணியும் சொலிசிட்டர் ஜெனரலுமான பாலித பெர்னாண்டோ சட்டமா அதிபராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போதைய சட்டமா அதிபர் ஈவா வனசுந்தர உச்ச நீதிமன்ற நீதியரசராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இதன்படி சட்டமா அதிபர் பதவி வெற்றிடமாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வெற்றிடத்திற்கு ஜனாதிபதி சட்டத்தரணி பாலித பெர்னாண்டோ நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான பாலித பெர்னாண்டோ 1979 ஆம் ஆண்டு சட்டதரணியாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார் என தெரிய வருகின்றது. (அ-2)


### யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்

### நூற்றாண்டு விழா-2012

யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம், 7 ஆம், 8 ஆம் திகதிகளில் கொண்டாட இருக்கின்ற நூற்றாண்டு விழாவிற்கு பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் ஒத்துழைப்பு நல்கி விழாவைச் சிறப்புறக் கொண்டாட வருமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

நூற்றாண்டு விழாச் சிறப்பு மலரின் சிறப்பு பிரதிகள் பெற விரும்புகின்றவர்கள் 05.07.2012 வியாழக்கிழமைக்கு முன்னர் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. (8741)

யா/அராலி சரஸ்வதி மகா
வித்தியாலய சமூகத்தினர்.


# 560 கிலோ போதைப்பொருளுடன் இந்திய மீனவர்கள் கைது

(மன்னார்)

மன்னார் தெற்கு கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இம்மீனவர்களை கற்பிட்டி கடற்படை அதிகாரிகள் நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர். இவர்கள் பயணித்த படகு ஒன்றும் ஹான்ஸ் போதைப்பொருள் அடங்கிய பெட்டிகள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றில் 560 கிலோ கிராம் ஹான்ஸ் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். படகு மற்றும் ஹான்ஸ்போதைப்பெட்டிகள் கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. (அ-9)

# விசா இல்லாத நிலையில் தங்கியிருந்த இந்தியர் கைது

(கொழும்பு)

விசா இல்லாத நிலையில் சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருந்த இந்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் வத்தேகம, பிட்டியேகெதற என்ற இடத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இந்தியரை பன்வில நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-9)

# புன்னாலைக்கட்டுவனில் இலங்கை வங்கிக்கிளை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் இலங்கை வங்கிக்கிளையின் விரிவாக்கற் கிளையொன்று நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் வடக்கில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இலங்கை வங்கீ சுன்னாகம் கிளை முகாமையாளர் பொ. பாலகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் விருந்தினர்களாக இலங்கை வங்கித்தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க, இலங்கை வங்கி பொது முகாமையாளர் கே. தர்மசிறி, விற்பனை நெறிப்படுத்தல் முகாமைத்துவ பிரதிப் பொது முகாமையாளர் எச்.எம். முதியான்சே, கிளை வங்கியியல் பிரதிப் பொது முகாமையாளர் டி.எம். குணசேகர, வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கே. ஈ. டி. சுமணசிறி, வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் எஸ். என். மாணிக்கசிங்கி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது கடந்த 30 ஆண்டுகளாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து விடுவிக்கப்பட்ட 100 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு வாழ்வாதார கடன்கள் வழங்கப்படவுள்ளன. (அ-9)

# நுளம்பு ஒழிப்பு பி.ரி.ஐ பக்றீரியா விற்பனை

(கொழும்பு)

நுளம்பை ஒழிக்கும் பி.ரி.ஐ. பக்றீரியா வெகுவிரைவில் நாடு முழுவதும் விற்பனைக்கு வருமென சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

பி.ரி.ஐ. பக்றீரியாவை அமெரிக்காவிலிருந்து தருவித்து நாடு முழுவதும் விற்பனை செய்ய தனியார் துறையினருக்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அனுமதி வழங்கியுள்ளார்.

கட்டிவடிவிலான பி.ரி.ஐ. பக்றீரியாவை சிறு துண்டுகளாக உடைத்து தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதிகளில் போட்டால் நுளம்பு பெருக்கம் முற்றாக அற்றுப்போகும் என சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது. (அ-2)

# மக்களின் பிரச்சினைகளை அரசு புரிந்துகொள்ளத் தவறியுள்ளது

## அரசை கவிழ்க்க வேண்டும் என்கிறார் சஜித்

(கொழும்பு)

அரசாங்கத்தின் தூரநோக்கற்ற நடவடிக்கைகளினால் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மக்களின் ஒத்துழைப்புடன் விரைவில் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைக்கும்.

மக்களின் விருப்பங்களை அறிந்து கொள்ளாத அரசாங்கத்தினால் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முடியாது.

இந்த தூரநோக்கற்ற எதேச்சதிகார அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டும். மக்களுக்கான ஓர் அரசாங்கத்தை அமைக்க வேண்டியது மிகவும் அவசியமானது.

அரசாங்கம் எல்லா வழிகளிலும் மக்களின் வயிற்றில் அடிக்கின்றது. பௌத்த மத மேம்பாட்டுக்காக இந்த அரசாங்கம் எதனையும் செய்யவில்லை.

இந்த நாட்டில் அனைத்து சட்டங்களும் வறியவர்களுக்கு மட்டும் பொருத்தமுடையதாக அமைந்துள்ளது. செல்வந்த வர்த்தகத்தினருக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்படுவதில்லை.

மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளை அரசாங்கம் புரிந்து கொள்ளத் தவறியுள்ளது என சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

உரும்பிராய்

# ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா சிறப்புமலர் -02.07.2012

## பிரதம குருவின் ஆசிச்செய்தி




ஆகமவழி சமைக்கப் பட்ட ஆலயங்களில் நைமித்திய கிரியைகளில் ஒன்றாக மஹோற்சவம் நடை பெறுகிறது. இங்கு இறைவனின் பஞ்ச கிருத்தியங்களைப் பிரதிபலிப்பதாகவும் இருப்பது இம்மஹோற்சவத்தின் தனிச் சிறப்பம்சமாகவும் உள்ளது. இதில் தேர் உற்சவம் என்பது பஞ்ச கிருத்தியங்களில் அழிப்பதை குறிப்பதாகும். பகைவரது பகைமையை அழித்து அவர்களைப் பக்குவப்படுத்தி ஆட்கொள்வதே சம்ஹாரம் ஆகும். தீமை பூண்ட ஆத்மாக்களை தூய்மைப்படுத்தி இறை நிலையோடு ஐக்கியப்படுத்துவதே, அழித்தல் தொழிலின் ஆதாரம் ஆகிறது. அவ்வகையில் கணங்களின் அதிபதியான இந்த மகா கணபதி முதல் நிலைத் தெய்வமாக முன் வந்து அருள் சுரப்பதிலும் அன்பு மிதுர வணங்கும் அடியவர்களை அரவணைத்து ஆட்கொள்வதிலும் தனித்துவம் மிக்கவர்.

இன்று உரும்பிராய் ஓடையம்பதி ஸ்ரீ கற்பக விநாயகப்பெருமான் தேர் ஏறி திரு வீதிவலம் வர உள்ளார். எம்பெருமான் விநாயகப்பெருமான் சர்வாலங்கார பூஷிதராய், ஜெகஜோதியாய் திருத்தேர் பவனி வந்து பக்தர்களை காத்து அருளும் இன்றைய புண்ணிய தினத்தில் அனைவருக்கும் ஐங்கரன் அருள்பாலிக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

ஆலய பிரதமகுரு
பிரம்மஸ்ரீ திஜாக.கிருஷ்ணமூர்த்திக்குருக்கள்

மலரமைப்பு:- S. ஞானேஸ்வரன்
Allianz Insurance
(Training Agency Leader)



## அழகுமிளிர் அருள்மிகு ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்

ஈழத்திருநாட்டின் மகுடமாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் சீரும் சிறப்பும் தன்னகத்தே கொண்டுள்ள வலிகாமம் கிழக்குப் பகுதியில் சைவமும் தமிழும் நிறைந்த உரும்பிராய் ஓடையம்பதி என்னும் திவ்விய ஷேத்திரத்தில் எழுந்தருளி துதிப்போரின் துன்பம் போக்கி காத்து அருள்மழை பொழியும் ஓடையம்பதி ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் வரலாறு காலத்தால் அழியாதது.

அந்நியர் ஆட்சியில் ஆலயங்கள் அமைக்க, பிரதிஷ்டை செய்ய, சைவவழிபாடு செய்ய அனுமதிக்கப்பட்ட போது மக்களின் மனதில் நிலை பெற்றிருந்த விநாயகப் பெருமானுக்கு கோயில் அமைக்கும் எண்ணம் நிறைவேறியது. 1834 ஆம் ஆண்டு கணபதி ஐயர் என்பவரால் மூன்று பரப்புக்காணியில் ஊர் மக்களின் உதவியுடன் கற்பகவிநாயகருக்கு ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. அன்று முதல் இன்றுவரை விநாயகப் பெருமானின் அடியார்களால் காலத்துக்கு காலம் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு படிப்படியாக ஆலயம் வளர்ச்சியடைந்து இன்று அழகுமிகு ஆலயமாகத்திகழ்கிறது..

இன்றைய காலத்தில் கற்பக விநாயகர் மீது முழு நம்பிக்கையையும் வைத்த அன்பர்கள் இலட்சோப இலட்சம் பணத்தை ஆலயத்திருப்பணிக்கு பயன்படுத்துகிறார்கள். அந்தவகையில் ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயம் சிற்பம்,ஓவியம், கட்டடம் விளங்க சிறப்பாக புனராவர்த்தனம் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து வந்த கலைஞர்கள் இவ்வாலயத்தைச் சிறப்புற மெருகூட்டினார்கள். இவ்வாலயத்தின் இராஜ கோபுரங்களிலும் பிரகாரங்களிலும் காணப்படுகின்ற சிற்பங்கள் மிகத்தத்ரூபமாக அன்பு, கருணை, ஆங்காரம், திருவருள் போன்ற நவரசங்களை வெளிப்படுத்தி ஆலயத்தில் அருளொளி வீசி அனைவரையும் தம்பால் ஈர்த்தவண்ணம் உள்ளன.

ஆலயத்தின் முன்புறத்தில் அனைவரையும் ஈர்த்துக்கொண்டிருக்கும் இரு மகாபெரிய யானைகளின் தோற்றம் பார்ப்பவர் கண்களைக்கவர்வன. இவ்வாலயத்தில் காணப்படும் சிற்பங்கள் இந்தியாவின் மாமல்லபுரச் சிற்பங்களை நினைவுபடுத்தக்கூடிய வகையில் காலப் பொக்கிஷமாக, எழிற்பொக்கிஷமாக திகழ்கின்றன.


விநாயகப் பெருமானின் முப்பத்திரண்டு தோற்றங்கள் கற்பக விநாயகர் ஆலயத்தின் விதானத்தில் அழகாக வரையப்பட்டுள்ளது. இராஜகோபுர வாசலில் (வெளிமண்டபத்தின்) இருபக்கங்களிலும் கருங்கல்லில் செதுக்கப்பட்ட ஏழு அடி உயரமான துவாரபாலகர் சிற்பங்கள் அழகுற அமைந்துள்ளன. ஆலயத்தின் முன்பக்கமாக (தெற்கு நோக்கி) சைவசமய குரவர்களின் சிற்பங்களும் புராண சம்பவங்களைச் சித்தரிக்கும் ஓவியங்களும் மிளிர்கின்றன.

இவ்வாலயத்தின் சுற்றுப் பிரகாரத் தெய்வங்களாக சிவன், பார்வதி, நடராஜர், தெட்சணாமூர்த்தி, மகாலட்சுமி, சந்தான கோபாலர், சுப்பிரமணியர், நவக்கிரகங்கள், காளியம்மன், வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய தெய்வங்கள் திகழ்கின்றன.

மகோற்சவத்தின் சிகரமாகத் திகழும் தேர்த்திருவிழாவன்று விநாயகப்பெருமான் சித்திரத்தேரில் எழுந்தருளும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமையும்.

அற்புத கீர்த்தி வேண்டின் ஆனந்த வாழ்வு வேண்டின் நற்பொருள் குவிதல் வேண்டின் எல்லாம் வல்ல கற்பகவிநாயகர் திருத்தேர் வடம் பிடித்து இழுத்து இவை யாவும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

## தலைவரின் ஆசிச்செய்தி



குறைதீர்த்து வினை தீர்க்கும் கற்பக விநாயகர் உரும்பிராயில் கோயில் கொண்டெழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார். வானுயர்ந்த கோபுரம், அழகுமிகு திருக்கோயிலும் வண்ணமிகு இரதங்களும் இவ்வாலயத்தின் தனிச்சிறப்பு. ஆனிப்பூரணையைத் தீர்த்த தினமாகக் கொண்டு வருடாந்த மஹோற்சவம் இங்கு இடம்பெறுகின்றது.

மகோன்னதமான உற்சவம் என்று சொல்லப்படுகின்ற மஹோற்சவத்தின் சிகரமாக அமைவது தேர்த்திருவிழா ஆகும். சைவசமயத்தின் எழுச்சி விழா சமுதாய ஒற்றுமையை உணர்த்தும் பெருவிழா.


நமது புராதன கலைச்செல்வங்களின் மகிமைக்குச் சான்றாக நடமாடும் மரச் சிற்பமாகவும் அசையும் கோயிலாகவும் தேர் அமைகிறது. மூலஸ்தானத்தில் இறைவன் விளங்குவது போல தேர் தட்டிலும் அவர் விளங்குகிறார். சில்லுகள் மூலம் அசையும் கோயில் போல தேர் விளங்குகின்றது என ஓர் அறிஞர் குறிப்பிடுகின்றார்.

தேரின் பீடம் இருதயத்தைக் குறிக்கும். இறைவன் தேரின் பீடத்தில் வீற்றிருந்ததும் தேர் ஓடுகின்றது. எமது வாழ்க்கைத் தேர் சிறப்பாக ஓடுவதற்கு எங்கள் இருதய பீடத்தில் கற்பக விநாயகப் பெருமானை எழுந்தருளச் செய்ய வேண்டும்.

அற்புத கீர்த்தி வேண்டின் ஆனந்த வாழ்வு வேண்டி நற்பொருள் குவிதல் வேண்டின் நலமெல்லாம் விளைய வேண்டின் எல்லாம் வல்ல கற்பக விநாயகர் திருத்தேர் வடம் பிடித்து இழுத்து இவை யாவும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

சைவப்புலவர் சி. நந்தகுமார்
பரிபாலன சபைத்தலைவர்,
உரும்பிராய் ஓடையம்பதி
கற்பக விநாயகர் ஆலயம்.

## வாழ்த்துச் செய்தி



உரும்பிராய் என்னும் கிராமத்திலே வானளாவ உயர்ந்து நிற்கும் கட்டடங்களையும் பசுமையான கண்ணிறைந்த காட்சிகளையும் இயற்கையான தலவிருட்சங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் யாழ் குடா நாட்டிலே அழகான சிறப்புமிக்க ஆலயமாக விளங்கும் உரும்பிராய் ஓடையம் பதி கற்பகவிநாயகர் ஆலயத்தில் இன்று விநாயக பெருமான் தேரேறி வருவதையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன்.

திரு.கே. சிறிராம்
Branch manager
Allianz Insurance

டனிஸ் ஹோட்டல்
ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.
தொ.பே:-0777283681

அலுமினிய சோக்கேஸ் வகைகள், யன்னல் கண்ணாடிவகைகள், டியூரோ பிறேம், பொக்ஸ் பிறேம் மற்றும் சுவாமிப்படங்கள் என்பனவற்றை பெற்றுக்கொள்ள
அன்னை பட மாடம்
கோப்பாய் வீதி,
உரும்பிராய் சந்தி.
தொ.பே:-0777989145

சகல விதமான நகைகளையும் பெற்றுக்கொள்ள
நியூ கவுசிக் ஜுவல்லறி
பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
தொ.பே:-0772182647
0214908659

சிவகுரு மரக்காலை
இந்துக்கல்லூரி
அருகாமை, பலாலி வீதி,
உரும்பிராய் .
தொ.பே:-0772618399
0217200525

ஸ்ரார் ஹோட்டல் & கிறீம் ஹவுஸ்
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.
தொ.பே:-0776368920
0772336319

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கிருபா லேணர்ஸ்
தலைமைக் காரியாலயம்
226,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021 222 4353
கிளை
சுன்னாகம்
கே.கே.எஸ் வீதி.
மதவடி முன்பாக
T.P:-0212 242 022
0714546956

அனைத்துவிதமான ஆடைகளையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்
கீர்த்திகா ரெக்ஸ்ரைல்ஸ்
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

சகல விதமான அழகுசாதனப் பொருட்கள் மற்றும் பாதணிகள்,பாடசாலை உபகரணங்களை பெற்றிட
உதயன் பான்சி
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.
தொ.பே:-0759015884

ஸ்ரீஜான்ஸ் ஐஸ்கிறீம்
கொண்டாட்டங்களுக்கான ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.
தொ.பே:-0776184602

பிரணவி தச்சுத் தொழிலகம்
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்-சரஸ்வதி வீதி
உரிமையாளர்:-
R.பிரபாகரன்
தொ.பே:-0774192124

# அசாமில் கனமழையைத் தொடர்ந்து நிலநடுக்கம்; 5.8 ரிக்டர் அளவில் ; நிவாரணப் பணிகள் தீவிரம்

(குவாஹாட்டி)

அசாம் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வந்த கனமழை ஓய்ந்து வெள்ளம் பாதித்த பகுதிகளில் நிவாரணப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ள நிலையில் நேற்றை தினம் லேசான நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.





இந் நிலநடுக்கத்தால் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

கடந்த ஒரு வாரமாக அசாமில் பெய்து வரும் கன மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பிரம்மபுத்ரா ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

கிராமங்கள், தேசிய பூங்கா என பெரும்பாலான பகுதிகள் தண்ணீரில் மூழ்கி உள்ளன. தொடர் மழைக்கு இதுவரை 35 பேர் உயிரிழந்துள்ளனர். 12 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 10 மான்கள் உள்ளிட்ட விலங்குகள் உயிரிழந்துள்ளன. வீடுகளை இழந்தவர்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்றைய அசாமின் சில பகுதிகளில் மிதமான நில நடுக்கம் ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நில நடுக்கம் நாகலாந்து, மிசோராம், மேகாலயா ஆகிய எல்லைப் பகுதிகளில் உணரப்பட்டதாகவும் ரிக்டர் அளவுகோலில் 5.8 ஆக பதிவானதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையே கன் மழையால் பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் 16 பேர் பலியாகியுள்ளனர். மீட்புப்பணிகள்மந்த நிலையில் இருப்பதாக அப் பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

நிவாரணப் பணிகளுக்காக சிறப்பு நிதியுதவி வழங்க வேண்டுமென வடகிழக்கு மாநில நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கோரிக்கை வைத்துள்ளதாக அசாம் கண பரிஷத் கட்சி தெரிவித்துள்ளது.

வெள்ளம் பாதித்த பகுதிகளை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தலைவர் சோனியா காந்தி பார்வையிடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (2)



சிரியா பிரச்சினை குறித்து ஆலோசிக்க சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடந்த கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் மற்றும் சிரியாவுக்கான ஐ.நா.சிறப்பு தூதரும் ஐ.நா.முன்னாள் பொதுச் செயலாளருமான கோபி அன்னான் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# முதன்முறையாக மியன்மாருக்கான அமெரிக்க தூதுவர் நியமனம்

22 ஆண்டுகளுக்கு பின்னர் முதன்முறையாக மியன்மாருக்கான அமெரிக்க தூதுவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அதிகார பூர்வ தூதுவரின் பெயர் செனட் சபையில் அறிவிக்கப்பட்டது.

தற்போது மியன்மாரில் ஜனாநாயகம் மலர்ந்துள்ள நிலையில் அந்நாட்டு முக்கிய எதிர்க்கட்சித் தலைவர் ஆங்சாங்சூகி தற்போது பல்வேறு நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். இந் நிலையில் அமெரிக்கா, மியன்மாருடன் தூதரக ரீதியாக நட்புறவு மேற்கொள்ளும் வகையில் 22 ஆண்டுகளுக்கு பின் முதல்முறையாக தூதுவரை நியமித்துள்ளது.

மியன்மாருக்கான அமெரிக்காவின் சிறப்பு பிரதிநிதியாக இருந்த டெரிமிட்செல் (வயது 48) தூதராக நியமிக்கப்பட்டார். இதற்காக ஒப்புதலை அமெரிக்க பாராளுமன்ற செனட் சபை வழங்கியது.

இவர் விரைவில் மியன்மார் சென்று பொறுப்பேற்றகவுள்ளார். அமெரிக்காவின் இந்த முடிவிற்கு மியன்மார் ஜனாதிபதி தைன்ஷென் வரவேற்பு தெரிவித்துள்ளார். (2)

# அமெ. கடற்படை பயிற்சியில் 22 நாடுகள் பங்கேற்றன



அமெரிக்காவின் ஹவாய் தீவில் உள்ள பேர்ல் ஹார்பரில் கடற்படை பயிற்சி ஆரம்பமாகியுள்ளது. அமெரிக்க கடற்படை 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை இதுபோன்ற பயிற்சியை நடத்தி வருகிறது. உலகின் மிகப்பெரிய கடற்படை பயிற்சி இதுவாகும். இதில் 22 நாடுகளைச் சேர்ந்த 25 ஆயிரம் மாலுமிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

இப் பயிற்சியில் வெடிகுண்டுகளை செயலிழக்கச் செய்தல், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் பொதுமக்களுக்கு உதவுதல் உள்ளிட்ட பல பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக பசுபிக் போர்க்கப்பல் கமாண்டர் செசில் ஹானே தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் ஒத்தகருத்து உடைய நாடுகள் கூட்டாக செயற்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். கடந்த 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற பயிற்சியில் 14 நாடுகள் பங்கேற்றன. ரஷ்யா, ஜப்பான் ஆகிய வல்லரசு முதல் சிலி, டோங்கா உள்ளிட்ட சிறிய நாடுகளைச் சேர்ந்த 42 போர்க் கப்பல்கள், 6 நீர் மூழ்கிக் கப்பல்கள் மற்று 200 போர் விமானங்கள் பங்கேற்கின்றன. (2)

# அணுவாயு சோதனையை நிறுத்த பி-5 நாடுகள்-வலியுறுத்துகின்றன

(வோஷிங்டன்)

அணுஆயுத சோதனைகளை நடத்துவதை அனைத்து நாடுகளும் நிறுத்த வேண்டும் என்று பி-5 எனப்படும் ஐந்து அணுசக்தி நாடுகள் கேட்டுக் கொண்டுள்ளன.

அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ரஷ்யா சீனா ஆகிய 5 நாடுகளும் அணுசக்தி கொண்ட வல்லரசு நாடுகளாக திகழ்கின்றன. பி-5 எனப்படும் இந்த நாடுகளின் முதல் மாநாடு கடந்த 2009 இல் லண்டனிலும் இரண்டாவது மாநாடு 2011 ஆம் ஆண்டு பாரிசிலும் நடைபெற்றன. இந்நிலையில் மூன்றாவது மாநாடு வோஷிங்டனில் கடந்த புதன்கிழமை தொடங்கி 3 நாட்கள் நடந்தது. வெள்ளிக்கிழமை மாநாடு முடிந்ததும் பி-5 நாடுகள் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டன.

அதில் கூறப்பட்டிருப்பதாவது,

அணுஆயுத பரவலைத் தடுப்பதில் பல்வேறு கடுமையான சவால்கள் இருப்பது கவலை தருகிறது. அணு ஆயுத ஆயுதங்களை ஒழிப்பது என்ற கூட்டுஇலக்கை சாதிப்பதில் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

அணு ஆயுத சோதனைகள் நடத்துவதை அனைத்து நாடுகளும் நிறுத்த வேண்டும். சீனா தலைமையில் ஒரு செயற்பாட்டுக்குழுவை அமைப்பதற்கான செயற்றிட்டத்திற்கு பி-5 நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன. இந்த நாடுகள் அணுசக்தி தொடர்பான தங்களின் இருதரப்பு மற்றும் பலதரப்பு அனுபவங்களை பகிர்ந்து கொண்டன. (அ-2)

# பாக். அதிகாரிகள் டில்லி விரைவு

(இஸ்லாமாபாத்)

எல்லைப் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் அதிகாரிகள் டில்லி விரையவுள்ளனர்.

இந்திய- பாகிஸ்தான் எல்லையை மீறுபவர்கள் தண்டனைக்குள்ளாகின்றனர். குறிப்பாக மீனவர்கள் இந்த விவகாரத்தில் அதிகம் பாதிக்கின்றனர். போதை கடத்தல்கள் அதிகளவில் எல்லைப் பகுதியில் நடக்கின்றன.

இப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான பாகிஸ்தான் எல்லை பாதுகாப்புப் படை தலைவர், போதை தடுப்புப் படை அதிகாரிகள் உள்ளிட்டோர் நேற்று முன்தினம் முதல் 5 ஆம் திகதி வரை டில்லியில் இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். எல்லையில் அத்துமீறி நடக்கும் துப்பாக்கிச் சூடு, கைதிகளை ஒப்படைத்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் இவர்கள் ஆராயவுள்ளனர். (2)

# துணை ஜனாதிபதிக்கான தேர்தல் குறித்த திகதி இன்று அல்லது நாளை அறிவிப்பு

துணை ஜனாதிபதிக்கான தேர்தல் குறித்த அறிவிப்பை இன்றோ அல்லது நாளையோ தலைமைத் தேர்தல் கமிஷன் அறிவிக்க உள்ளது. அநேகமாக ஓகஸ்ட் 7 அல்லது 8 ஆம் திகதி துணை ஜனாதிபதி தேர்தல் நடைபெறலாம். இந்நிலையில் பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து ஒரு மாதம் வரை நடைபெறும்.

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் ஆரம்பமாகி அனைத்து விதமான நடவடிக்கைளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. பிரதான வேட்பாளர்களான பிரணாப் முகர்ஜியும் சங்மாவும் தங்களுக்கு ஆதரவு திரட்டும் வகையில் பல்வேறு மாநிலங்களுக்கு சுற்றுப் பயணத்தையும் ஆரம்பித்து விட்டனர்.

ஏற்கனவே பிரணாப் முகர்ஜி சார்பில் நான்கு வேட்பு மனுக்களும் சங்மா சார்பில் மூன்று வேட்பு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் இதுவரைக்கும் 67 பேர் வேட்பு மனு தாக்கல் செய்து விட்டனர். இன்னும் 17 பேர் வரிசையில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதை வைத்துப் பார்க்கும் போது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவோரின் எண்ணிக்கை செஞ்சுரி அடிக்க அதிக பட்ச வாய்ப்பு இருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் துணை ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் குறித்த பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த தேர்தல் குறித்த அறிவிப்பு ஏற்கனவே வெளியிடப்பட்டிருக்க வேண்டும். சில காரணங்களால் காலதாமதமாகிவிட்டது.

எனவே, இன்றோ அல்லது நாளையோ துணை ஜனாதிபதிக்கான தேர்தல் குறித்த அறிவிப்பை தலைமைத் தேர்தல் கமிஷன் வெளியிடலாம் என குறிப்பிடப்படுகிறது. (2)

# உலக வங்கியின் தலைவராக ஜிம்-யோங்கிம் பதவியேற்றார்

(வோஷிங்டன்)

உலக வங்கியின் தலைவராக ஜிம்-யோங்கிம் பொறுப்பேற்றார். 9 ஆயிரம் ஊழியர்களை கொண்ட உலக வங்கியில் 188 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. உலக வங்கியின் தற்போதைய தலைவராக இருந்த ரூபர்ட் ஜியோலிக் பதவிக் காலம் நிறைவடைந்ததையொட்டி புதிய தலைவராக அமெரிக்க வாழ் தென்கொரியாவைச் சேர்ந்த ஜிம்-யோங்கிம் (வயது 54) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதனை கடந்த ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அதிகார பூர்வமாக அறிவித்தார்.

டாக்டரான ஜிம்-யோங்கிம் அமெரிக்காவின் பல்வேறு பல்கலைகளில் முக்கிய பொறுப்பு வகித்துள்ளார். தற்போது அமெரிக்காவின் டார்ட்மவுட் கல்லூரியின் தலைவராகவுள்ளார். உலக வங்கியின் 12 ஆவது தலைவராக நேற்றைய தினம் பொறுப்பேற்றுள்ளார். (அ-2)

வெற்றிக்கான பாதை ஒன்றே ஒன்று தான் உள்ளது. அது தான் நேர்மை வழிப் பாதை. மற்றப்பாதைகள் பாதைகள் அல்ல -ஸரதுஸ்திரர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 24 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 24 பேர் கடந்த வாரத்தில் மட்டும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனயாழ்.மாவட்டசிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறிகுகநேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை அவரது இல்லத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாட்டில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் இரவு பகலாக கடமையாற்றி வருகின்றனர்.

கடந்த வாரத்தில் மட்டும் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலர் பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள். இதில் யாழ். பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொலிஸ் நிலையங்களினால் 14 பேரும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொலிஸ் நிலையங்களினால் 10 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தவிர கடந்த வாரத்தில் யாழ். மாவட்ட பொலிஸ் நிலையங்களில் 8 பாரிய குற்றச் செயல்கள் தொடர்பான முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன.

இதில் மூன்று கத்திக்குத்து சம்பவங்களும் 3 திருட்டுச் சம்பவங்களும் ஒரு பாலியல் வல்லுறவுச் சம்பவமும் ஒரு கொள்ளைச் சம்பவமும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு ஒரு கிலோகிராமுக்கு அதிகமாக கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரிலும் 14 மில்லிகிராம் ஹெரோ யின் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரிலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் யாழ். போதனா வைத்திய சாலையின் புற்றுநோய் வைத்திய நிபுணர் வைத்தியர் என். ஜெயக்குமார் வீட்டின் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்படுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## ஆட்டோ உரிமையாளர் சங்கம் புதிய நடைமுறையை அமுல்படுத்த வேண்டும்

கொழும்பிலிருந்து இரவுவேளை பஸ் ஏறிய பயணிகள் காலைவேளையில் யாழ்ப்பாணத்தை வந்தடைவார்கள். காலைவேளையில் யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற பயணிகளை அவர்களின் வீடுகளுக்குக் கொண்டு சென்றுவிடுவதில் ஆட்டோ சாரதிகள் பகீரத முயற்சி எடுப்பர்.

அந்த முயற்சிகள் பல இடங்களில் தோற்று விடுவதையும் காணமுடிகின்றது.

ஆட்டோவுக்கான கட்டணத்தைத் தீர்மானிப்பதில் பயணிக்கும் ஆட்டோ சாரதிகளுக்குமிடையே இழுபறி நடப்பதே அதற்குக் காரணம்.

குறிப்பிட்ட தூரத்திற்குச் செல்வதற்கு ஒரு ஆட்டோ சாரதி முந்நூறு ரூபாய் என்பார். இன்னொருவர் ஐந்நூறு ரூபாய் என்பார்.

இவ்வாறு ஆளுக்காள் கட்டண வேறுபாடு இருப்பது ஆட்டோ சாரதிகள் மீதான நம்பிக்கையீனத்தை ஏற்படுத்த,

ஐயா! நடந்து போனாலும் போவோமே தவிர ஆட்டோ வேண்டவே வேண்டாம் என்று பயணிகள் முடிவெடுக்கின்றனர்.

இத்தகைய முடிபு ஆட்டோவின் வருமானத்தை நம்பியிருப்பவர்களுக்குப் பாதகமாகவே அமைகின்றது.

கொழும்பில் இப்போது ஆட்டோக்களில் கிலோ மீற்றர்களைப் பதிவு செய்யக்கூடிய மீற்றர்களைப் பொருத்தியுள்ளனர்.

முதலாவது கிலோ மீற்றருக்கு ஐம்பது ரூபாய். ஏனைய ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் முப்பத்தைந்து ரூபாய்ப்படி அறவிடப்படும். இந்த நடைமுறையை அனைத்து ஆட்டோச் சாரதிகளும் பின்பற்றுகின்றனர்.

எவ்வளவு கிலோ மீற்றர் தூரமோ அந்தளவிற்கான கட்டணத்தை மீற்றர் கணக்கிடும். அத் தொகையைச் செலுத்தினால் போதுமானது.

இதன் காரணமாக இப்போது கொழும்பில் ஆட்டோக்கள் மீதான நம்பிக்கை அதிகரித்துள்ளதுடன் கட்டணம் தொடர்பிலான பேரம் பேசுதல் எதுவுமில்லாமல் பயணம் சுமுகமாக தொடரப்படுகின்றது.

கொழும்பில் ஆட்டோக்களில் மீற்றர்கள் பொருத்தப்பட்டப் பின்னர் ஆட்டோக்களில் செல்கின்ற பயணிகளின் எண்ணிக்கை நினைத்துப்பார்க்க முடியாத அளவிற்கு அதிகரித்துள்ளதை புள்ளிவிபரங்கள் உறுதி செய்துள்ளன.

அண்மையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த அன்பர் ஒருவர் ஆட்டோவில் ஏறி தனது வீட்டிற்குச் சென்றுள்ளார். இரண்டு கிலோ மீற்றர் தூரம் கூட இருந்திருக்காது. இருநூறு ரூபாய் கட்டணத்தை ஆட்டோச் சாரதி அறவிட்டார்.

இதே தூரத்தை கொழும்பில் பயணிப்பதாக இருந்தால், எண்பத்தைந்து ரூபாய் மட்டும் போதுமானதாகும்.

ஆக, சந்தர்ப்பம் கிடைத்து விட்டது என்பதற்காக கட்டணத்தை கண்டபாட்டில் அறவிட்டால், ஆட்டோக்களுக்கான ஓட்டம் மிகக் குறைவாகவே இருக்கும்.

எனவே யாழ்ப்பாண முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் ஆட்டோக்களில் மீற்றர்களைப் பொருத்தி அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தை அறிவிக்க வேண்டும். அதன்மூலம் எடுத்ததுக்கெல்லாம் ஆட்டோ பிடிப்போம் என்று மக்கள் முடிவெடுப்பர். இது விடயத்தில் உரிய அரச அமைப்புகளும் கவனம் செலுத்த வேண்டும்.

## வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் 'தாண்டவ உதயம்'

(வவுனியா)

நாட்டிய பேராசான் கலாபூசணம் வேல் ஆனந்தனின் நெறியாள்கையில் உருவான தாண்டவ உதயம் கீழைத்தேய ஆடற்கதை நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா பிரதேச செயலாளர் அ. சிவபாலசுந்தரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கௌரவ விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல கரிச்சந்திர ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில் கடந்தவாரம் மேற்படி நிகழ்வு யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டு பலரது வரவேற்பையும் பெற்றிருந்த நிலையில் இந் நிகழ்வை வவுனியாவில் அரங்கேற்றுமாறு வவுனியா கலைஞர்கள் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையிலேயே நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## தீர்த்தக்கடலின் இறுவெட்டு வெளியீடு

பண்டிதர் பொன் சுகந்தனால் எழுதப்பட்டு தென்னிந்திய முன்னணிப் பாடகர்களால் பாடப்பெற்ற பொலி கண்டி கந்தவனக் கடவை கல்யாண வேலவ சுவாமி மீதான பக்திப்பாடல்கள் இறுவெட்டு வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை தீர்த்தக்கடலின் மத்தியில் ஆலய ஆதீனகர்த்தா திருமதி சி. இராமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் இறுவெட்டினை ஆலய பிரதம குரு வைத்தியநாதக்குருக்கள் வெளியிட்டு வைப்பார். (அ)

# யாழ் போதனா வைத்தியசாலையின் முறைகேடுகள் குறித்து ஆராய மற்றொரு குழு இன்று வருகை

யாழ்.போதனா வைத்தியசாலையில் நடந்த முறைகேடுகள் குறித்து ஆராய்வதற்கு மற்றுமொரு சுகாதார அமைச்சின் உயர்மட்டக் குழு இன்று யாழ் வருகிறது.

இக் குழு சுகாதார அமைச்சின் இரண்டாம் நிலை அதிகாரி வைத்திய கலாநிதி லஷ்மி சோமதுங்க தலைமையிலேயே யாழ் வருகிறது.

கடந்த மாதம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்திருந்த 7பேர் கொண்ட சுகாதார அமைச்சின் பிரதான கணக்காளர் கொண்ட குழுவின் விசாரணை அறிக்கைகள் சுகாதார அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இக்குழு போதனா வைத்திய சாலைக்கு வருகிறது.

இவ் உயர் மட்டக்குழு யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் கொந்தளிப்பினை ஆராய்வதற்காகவே வைத்தியாசாலைக்கு வருவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் பவானந்தராஜா யாழ் வைத்திய சங்கத்திற்கு கடிதம் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார்.

உயர் மட்டக்குழு யாழ் போதனா வைத்திய சாலையின் வைத்திய சங்கத்தினரையும் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சந்திப்பின் போது யாழ். போதனா வைத்தியசாலையின் முறைகேடுகள் தொடர்பிலும், அமைதியின்மை தொடர்பிலும், வைத்தியர்கள் பணிப்பாளர்களுக்கிடையில் காணப்படும் முறுகல் நிலைகள் தொடர்பிலும் ஆராயவுள்ளதாக மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி தொடர் பகிஷ்கரிப்பினை மேற்கொள்ளப்போவதாக அறிவித்திருந்த நிலையிலேயே இக்குழு யாழிற்கு விரைகின்றது.

இக்குழுவின் விசாரணை முடிபுகள் உடனடியாகவே யாழ் மருத்துவ சங்கத்தினரிடம் தெரிவிக்கப்படவுள்ளதோடு வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பினால் ஏற்படும் பாதிப்புக்களினையும் சுட்டிக்காட்டவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ் போதனா வைத்திய சாலையில் அமைதியேற்றப்படுத்துவதற்கும், வைத்தியர்கள் தடைகளில்லாமல் பணிகளினை தொடர்வதற்கும் வைத்தியசாலைப் பணிப்பாளர் தொடர்பில் மாற்றம் தேவை என்பதனையும் அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டியுள்ளதாகவும் மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது. (எ-4)

## பேராதனை மாணவர்கள் இருவருக்கு விளக்கமறியல்

பேராதனை ஓய்வு விடுதியை தாக்கியமை, ஊழியர்களைத் தாக்கியமை, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை, பணத்துடன் தப்பிச் சென்றமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் இருவரை ஜூலை மாதம் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி மேலதிக நீதவான் சம்பத் ஹேவவாசம் உத்தரவிட்டார்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் 3ஆம் வருட மருத்துவபீடத்தைச் சேர்ந்த இந்த மாணவர்கள் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (அ-2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### மனிதன்



உறங்கும் ஆன்மாவை எழுப்புங்கள். அது எவ்வாறு விழித்தெழுகிறது என்பதைப் பாருங்கள். உறங்குகின்ற ஆன்மா மட்டும் விழித்தெழுந்து தன்னுணர்வுடன் (Self- Conscious) செயலில் ஈடுபடுமானால் சக்தி வரும், பெருமை வரும், நன்மை வரும், தூய்மை வரும் எவையெல்லாம் மேலானதோ அவை அத்தனையும் வரும்.

அனைத்து ஆற்றல்களும் நம்முள்ளே இருக்கின்றன. நமது முக்தியும் ஏற்கனவே நம்முள் இருக்கிறது. ஆன்மா சுருங்கியுள்ளது அல்லது மாயையாகிய திரையால் மறைக்கப்பட்டிருக்கிறது என்று எப்படி வேண்டுமானலும் சொல்லிக்கொள்ளுங்கள். கருத்து இதுதான்- மிகத்தாழ்ந்தவர் முதல் அனைவரிடமும் புத்தர் ஆவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

நாம் துன்பப்படுவதற்கு நாம், நாமேதான் காரணம்; வேறு யாரும் அல்ல. நாமே விளைவுகள், நாமேகாரணங்கள். எனவே நாம் சுதந்திரர்கள். நான் துன்பப்பட்டால் அது எனக்கு நானே உண்டாக்கிக்கொண்டது. நான் விரும்பினால் என்னால் மகிழ்ச்சியாக இருக்கமுடியும் என்பதையும் இது காட்டுகிறது.

# இங்கிலாந்து அணியிலிருந்து பெக்காம் நீக்கம்




ஒலிம்பிக் போட்டிக்கான இங்கிலாந்து அணியில் இடம் பெறாதது தனக்கு ஏமாற்றத்தை அளிப்பதாக முன்னாள் அணித்தலைவர் டேவிக் பெக்காம் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியில் தனக்கு கண்டிப்பாக இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் காத்துக் கொண்டிருந்தார் டேவிட் பெக்காம். ஆனால் எதிர்பாராத விதமாக அவர் அணியில் இடம் பெறவில்லை. இது குறித்து பெக்காம் கூறுகையில்,

அணியில் வாய்ப்பு கிடைக்காதது மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது ஆனால் அணிக்கு பலமாக என்னை விட வேறு யாரும் பெரிய அளவில்லை இருக்க முடியாது என்று தெரிவித்தார். லண்டனில் பிறந்தவரான பெக்காம் இங்கிலாந்து அணிக்காக 115 சர்வதேச போட்டிகளில் விளையாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.




# இலங்கை தொடரில் சச்சின் இல்லை



இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ள இந்திய அணி 5 ஒருநாள் போட்டி மற்றும் ஒரு 20-20 ஆட்டத்தில் விளையாடுகிறது.

இதில் பங்கேற்கும் இந்திய அணி வீரர்களின் தெரிவு வருகிற 4 ஆம் திகதி நடக்கிறது. இந்நிலையில் சமீபகாலமாக அணிக்கு தெரிவு செய்யப்படாமல் உள்ள ஹர்பஜன் சிங் இலங்கை தொடரில் தேர்ந்தெடுக்கப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளையில் ஆல்ரவுண்டர் ஜடேஜா நீக்கப்படக் கூடும் என தெரிகிறது. ரெய்னா, ரோகித்சர்மா ஆகியோரை கொண்டு சுழற்பந்து வீச்சை சமாளித்துக் கொள்ளலாம் என கருதப்படுகிறது. சேவாக் மீண்டும் அணிக்கு திரும்புகிறார். ஹர்பஜனுடன் ராகுல்சர்மா, ஓஜா ஆகியோரும் தெரிவாகின்றனர். சச்சின் இந்த தொடரில் விளையாடுவாரா என்பது சந்தேகமாக உள்ளது. அவர் ஆடாத பட்சத்தில் ரகானேவுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

வேகப்பந்து வீச்சில் தின்டாவுக்கு வாய்ப்பு கொடுக்கப்படும் என தெரிகிறது.

# மேற்கிந்திய தீவுகள் அணி பலமானது - வொற்சன்




எதிர்வரும் செப்டெம்பரில் இலங்கையில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக டுவென்ரி டுவென்ரி தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணியே கவனிக்கப்படத்தக்க அணியாகக் க்ாணப்படுகிறது என அவுஸ்திரேலிய அணியின் உப தலைவரும் சகலதுறை வீரருமான ஷேன் வொற்சன் தெரிவித்துள்ளார்.

இத்தொடரில் தோற்கடிக்கப்பட வேண்டிய அணியாக மேற்கிந்தியத் தீவுகள் அணியே காணப்படுவதாகத் தான் கருதுவதாகத் தெரிவித்த ஷேன் வொற்சன் மேற்கிந்தியத் தீவுகள் அணி மிகவும் சமநிலையான ஓர் அணியாக்க் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

அத்தோடு உலகம் முழுவதும் அவ்வணியின் வீரர்கள் டுவென்ரி டுவென்ரி போட்டிகளில் பங்குபற்றியுள்ளதோடு அழுத்தங்களுக்கு மத்தியில் விளையாடவும் பழகியுள்ளார்கள் என அவர் தெரிவித்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியில் காணப்படும் அதிரடி வீரர்கள் ஏனைய அணிகளுக்கு சவாலை வழங்குவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியில் அவ்வணியின் அதிரடி ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெயில் மீண்டும் இணைந்துள்ளதை அடுத்து மேற்கிந்தியத் தீவுகள் அணி அதிரடி வீரர்களைக் கொண்டதாகக் காணப்படுகிறது.

கிறிஸ் கெயில், கெரான் பொலார்ட், டுவைன் பிராவோ போன்ற அதிரடி வீரர்களோடு சுனில் நரைன் என்ற மாயச் சுழந்து வீச்சாளரையும் அவ்வணி கொண்டு காணப்படுகிறது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி தவிர தங்களுடைய அணிக்கும் வாய்ப்புக்கள் காணப்படுவதாகத் தெரிவித்த ஷேன் வொற்சன் டுவென்ரி டுவென்ரி போட்டிகளில் தங்களுடைய அணி தொடர்ச்சியாகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

# உதைபந்தாட்டப் போட்டி



புத்தூர் ஶ்ரீவிக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு பொன் விழாவை முன்னிட்டு நடைபெற்று வரும் மாபெரும் உதை பந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று திங்கட்கிழமை பி.ப.4 மணிக்கு புத்தூர் ஶ்ரீவிக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற உதை பந்தாட்டப்போட்டி குழப்ப நிலையில் முடிவுற்றமையால் வெற்றி தீர்மானிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# உடுவில் மகளிர் கல்லூரி வெற்றி

வடமாகாண கல்வித் திணைக்களமும் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கமும் இணைந்து முதல் தடவையாக வடமாகாண பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 13 வயதுப் பிரிவு பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.


யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையும் மோதின.


முதல் பாதி ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி 10 இற்கும் 04 புள்ளிகள் என முன்னிலையில் இருந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்திலும் உடுவில் மகளிர் கல்லூரி 09 இற்கும் 02 புள்ளிகள் என்ற நிலையில் முன்னிலையில் இருந்தது.

ஆட்ட நிறைவில் உடுவில் மகளிர் கல்லூரிக்கு 19 இற்கும் 06 புள்ளிகள் என்ற அடிப்படையில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையை வெற்றி பெற்று யாழ். வடமாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

# கொழும்பு டெஸ்ட்: வலுவாக பாகிஸ்தான்


# இரட்டைச் சதத்தை தவறவிட்டார் ஹபீஸ்





(கொழும்பு)

இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள்



ஆட்டத்தில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் மொகமட் ஹபீஸ் இரட்டைச் சதத்தை தவற விட்டார்.

இலங்கைக்கு சுற்றுப்பயண்ம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகின்றது.

முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 209 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது.

இந்நிலையில் 2-வது டெஸ்ட் போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதன் மூலம் முதல் டெஸ்டில் தோல்வியடைந்த பாகிஸ்தான் அணி இந்த டெஸ்டில் வெற்றி கொள்ளும் முனைப்போடு துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

தொடக்க வீரராக தௌபீக் உமர் 65 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பிரசன்ன ஜெயவர்த்தனவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

மற்றுமொரு தொடக்க வீரரான மொகமட் ஹபீஸுடன், அசார் அலி இணை சேர்ந்தார். பின்னர் அதிரடியாக விளையாடிய இருவரும் அணியின் எண்ணிக்கையை வெகுவாக உயர்த்தினர்.

பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் முதலாம் நாள் ஆட்ட நேர முடிவில் 1 விக்கெட் இழப்பிற்கு 334 ஓட்டங்கள் எடுத்தது.

தொடக்க வீரரான மொஹட் ஹபீஸ் 18 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் சதம் கடந்து 172 ஓட்டங்களும், அசார் அலி 6 பவுண்டரிகளுடன் அரைச்சதம் கடந்து 92 ஓட்டங்களும் எடுத்திருந்தனர்.

நேற்று 2-ம் நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

இரட்டைச் சதத்தை நோக்கி விளையாடிய மொஹமட் ஹபீஸ் 196 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரங்கன ஹேரத்தின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

சதத்தை கடந்து 157 ஓட்டங்கள் எடுத்த அசார் அலி குலசேகரவின் பிடியில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய யூனிஸ் கான் 32 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

மழையால் போட்டி சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

அடுத்து களமிறங்கிய அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் 29 ஓட்டங்களும் அசாத் சபிக் ஒரு ஓட்டத்தையும் எடுத்துள்ளனர். நேற்றைய ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் அணி 4விக் கெட் இழப்பிற்கு 488 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இன்று போட்டியின் 3-ம் நாளாகும்.

# ஹெயில் அதிரடி; மே.தீவுகளிடம்

# வீழ்ந்தது நியூசிலாந்து அணி



நியூசிலாந்து அணிக்கு எதிரான முதலாவது இருபது-20 போட்டியில் ஹெயிலின் அதிரடியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 56 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

நியூசிலாந்து-மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதிய முதலாவது இருபது-20 கிரிக்கெட் போட்டி அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள லவ்டர்வர் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்துஅணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 209 ஓட்டங்கள் குவித்தது.


கிறிஸ் கெய்ல் ஆட்டமிழக்காமல் 52 பந்தில் 7 பவுண்டரி, 5 சிக்ஸருடன் 85 ஓட்டங்களும், பொல்லார்ட் 29 பந்தில் 5 பவுண்டரி, 5 சிக்ஸர்களுடன் 63 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதனையடுத்து 210 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 18.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 153 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

இதனால் மேற்கிந்திய தீவுகள் அணி 56 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

நியூசிலாந்து தொடக்க வீரர் நிக்கோல் அதிகபட்சமாக 32 ஓட்டங்களை எடுத்தார். ஓரம் 27 ஓட்டங்களையும் சௌத்தி 23 ஓட்டங்களையும் எடுத்தனர். மற்றைய வீராகள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில் சுனில் நரைன் 3 விக்கெட் கைப்பற்றினார்.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட இருபது -2 தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.



விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றில், இந்தியாவின் பூபதி, சானியா ஜோடி, ஆஸ்திரேலியாவின் ஹான்லே, ரஷ்யாவின் கடயவ்செவா ஜோடியிடம், 6-3, 6-1 என்ற நேர் செட்களில் வீழ்ந்தது.



## பொத்துவிலில் 800 ஏக்கர்...

பாணமை என்ற இடத்தி லுள்ள வாவியையும் அதனை அண்டிய பிரதேசத்தையும் உள் ளடக்கிய சுமார் 800 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பகுதியை கடற்படையினர் கையகப் படுத்தியுள்ளதாக பாணமை லாஹுகல பிரதேச சபைத்தலைவர் ராசையா சந்திரசேன கூறுகிறார்.

பெரும்ஹோட்டல்கள்அமைக்கும்தோரணை யில் குறித்த பகுதியில் கட்டிட நிர்மாணங்கள் அமைந்து வருவதாக பிரதேசசபைத் தலை வர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தில் செல்வாக்கு மிக்கவர் களின் தேவைக்காக கட்டிட நிர்மாணங்களை அமைப்பதற்காக படையினரைப் பயன் படுத்தி அரசு தமது பிரதேசங்களில் நூற்றுக் கணக்கான ஏக்கர் காணிகளை கையகப் படுத்தி வருவதாக ராசையா சந்திரசேன தெரி வித்தார்,

முன்னர் யுத்த காலத்தில்கூட கடற்படை முகாம் எதுவும் அமைத்திராத பாணமை வாவியை அண்டிய பிரதேசத்தில் கடற்படை யினர் பெரும் எடுப்பில் அமைத்துவரும் கட்டிட நிர்மாணங்களால் பெருமளவிலான குடும்பங்கள் வாழ்வாதாரங்களை இழந்து விட்டதாகவும் அப்பகுதியில் சுற்றுசூழல் பாதிப் புக்கள் ஏற்பட்டுவருவதாகவும் லாஹுகல பிர தேச சபைத் தலைவர் கூறினார்.

இதேவேளை நாட்டின் பாதுகாப்புக்காக படைமுகாம்கள் அமைக்கப்பட்டுவருவதாக அரச தரப்பில் கூறப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## கிறிஸ்மஸ்...

இந்நிலையில் ஆயிரம் கிலோமீற்றர்கள் பயணம் செய்து 70 இலங்கை அகதிகள் நேற்று முன்தினம் கோகோஸ் தீவுகளைச் சென்றடைந்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது:

இதனிடையே, அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பும் நோக்கில் கதிர்காமம் துட்டகெமுனு ஓய்வு மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 5பேர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். கதிர்காமம் பொலிஸா ருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் வவு னியா, முல்லைத்தீவு மற்றும் நீர்கொழும்பு பிர தேசங்களைச் சேர்ந்தவர்கள் என குறிப்பிடப்பட் டுள்ளது.

சந்தேகநபர்களுக்கு உடப்பு பிர தேசத்தில் உள்ள ஆட்கடத்தல்காரர் ஒருவர் வரும்வரைஅங்கு தங்கி யிருக்குமாறு பணிக்கப் பட்டிருந்தது.

இந்தகடத்தல் தொடர் பில் பிரதான சந்தேக நபர் இதுவரை கைது செய்யப்படாத நிலை யில் அவரை தேடி விசேட பொலிஸ் குழுவொன்று அனுப்பப்பட்டுள்ளது. (எ-11)






## தஞ்சம் வழங்கும் நாடுகளில் பிரித்தானியா முதலிடம்!

கடந்த வருடம் ஐரோப்பிய வலய நாடுகளில் அதிகமானவர்களுக்கு தஞ்சம் வழங்கிய நாடாக பிரித்தானியா விளங்குகின்றது. 2011 இல் பிரித்தானியாவில் 14 ஆயிரத்து 360 பேருக்கும் பிரான்சில் 10 ஆயிரத்து 740 பேருக்கும் சுவிடனில் 10 ஆயிரத்து 625 பேருக்கும் நெதர்லாந்தில் 8 ஆயிரத்து 380 பேருக்கும் இத்தாலியில் 7 ஆயிரத்து 485 பேருக்கும் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

2008-ம் ஆண்டுக்குப் பிறகு தொடர்ந்து 3 வருடமாக இத்தொகை அதிகரித்துள்ளது. இது 41 சதவீத அதிகரிப்பாகும். அதிகம் தஞ் சம் கோருவோரை நாட்டுக்குள் அனுமதித்ததில் பிரித்தானியாவுக்கு முதலிடம் கிடைத்துள்ள நிலையில் இவ் விடயத்தில் பிரித்தானிய நெகி ழ்வுப் போக்கை கடைப் பிடித்ததாகவும் குறை கூறப்படுகிறது.

இதேநேரம் பிரிட்டனில் தஞ்சம் கோரிய 1/3 பகுதியினருக்கு அவர்களின் கோரிக்கை வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரான்சில் இது ஏழு பேருக்கு ஒருவராகவும் ஜேர்மனியில் இது 5 பேருக்கு ஒருவராகவும் காணப்படுகிறது.

தஞ்சம் கோரியோர் நன்கு பராமரிக்கப் படுவதாலும் அவர்கள் உலகின் எப்பகுதியி லிருந்து வந்தாலும் நாங்கள் பேசும் ஆங்கில மொழியை அவர்களும் தமது இரண்டாவது மொழியாக பேசுபவராக காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## இலங்கை...

வெளிப்படுத்தினார்.

இந்தியாவிற்கும் எமக்கும் இடையில் உறவு நிலவுவதற்கான காரணம் பரஸ்பரம் மதிப்ப ளித்தல் மற்றும் ஒவ்வொருவருடைய சுயா தீன தன்மையை பாதுகாப்பதுமாகும்.

நாம் சுயாதீன நாடு என்ற வகையில் எம க்கு உள்ள சுதந்திரமும், அதேபோல இந்தியா விற்கு உள்ள சுதந்திரமும், பாதுகாக்கப் படுதல் அவசியமாகின்றது. இந்த நிலையில் மேனனின் விஜயம் காட்டுவது இந்தியாவின் அழுத்தத் தின் மற்றும் ஒரு பரிமாணமாகவே உள்ளது.(எ-11)

## சர்வதேச கறுப்புப்...

நடவடிக்கைகளை புகழ்ந்து பாராட்டும் பொறி முறைமையுடைய ஊடகங்களுக்கு மட்டுமே சந்தர்ப்பம் உண்டு என்பதனை வெளிப்படுத்து வதாகவே இவ்வாறன கட்டுப்பாடுகள் நோக்கப் பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனிப்பட்ட நபர்கள் மீது சேறுபூசும் ஊட கங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமா யின், அரசாங்கம் முதலில் அரச ஊடகங்க ளையே கட்டுப்படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச ஊடகங்கள் எதிர்க் கட்சி உறுப்பினர் களுக்கெதிராக கடுமையான விமர்சனங்களை வெளியிட்டு வருவதாக தெரிவித்துள்ளார். இணையத்தள முடக்கம் மற்றும் ஊடகவிய லாளர்கள் கைது ஆகிய நடவடிக்கைகளை எந்தவொரு நியாயமான தரப்பினரும் அனு மதிக்க மாட்டார்கள் என அவர் குறிப்பிட்டுள் ளார். (எ-11)

## வடக்கு தமிழ் மக்...

இலங்கை உள்ளிட்ட உலக நாடுகளின் ஊடகவியலாளர்களுடன் நேரடியாக காணொளி மூலம் இடம்பெற்ற கலந்துரையா டலின் போதே, அமெரிக்காவின் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் விவகாரங்களுக்கான பிரதி ராஜாங்க அமைச் சர் மைக்கல் போஸ்னர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த மைக்கல் போஸ்னர், இலக்கையின் நல்லிணக்கம் மற்றும் மனிதவுரிமை விவகாரங்கள் தொடர் பில் கரிசனையுடன் செயற்பட்டுவரும் அமெ ரிக்கா, இவ்விடயம் தொடர்பில் இலங்கை அர சாங்கத்திடம் தொடர்ந்து கேள்வி எழுப்பும் எனக் கூறியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸு டன் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹில் லாரி கிளின்டனும் தானும் கடந்த மே மாதம் நடத்திய சந்திப்பின்போது கரிசனைக்குரிய விவகாரங்கள் தொடர்பில் வாதிக்கப்பட்டிருந் தது. இவ்விவகாரங்கள் தொடர்பில் அரசாங் கத்துக்கு அமெரிக்கா தொடர்ந்தும் அழுத்தங் களைப் பிரயோகிக்கும்.

இலங்கையின் வடபகுதியில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மீது தொடர்ந்தும் பாகுபாடு காட் டப்படுகின்றது. இந்நிலையில், தமிழ் மக்களை நல்லிணக்கத்துடன் அரவணைத்துக் கொள் வதற்கான செயற்திட்டம் ஒன்றை இலங்கை அரசாங்கம் கொண்டிருக்க வேண்டும் என மைக்கல் போஸ்னர் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத் தினால் அண்மையில் வெளியிடப்பட்டிருந்த உலக மனிதவுரிமைகள் நிலைமை தொடர் பிலான அறிக்கையை மையப்படுத்தியே இந் தக் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## மனிதவுரிமை...

என சிவ்சங்கர் மேனன் இந்திய ஊடக வியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் ஒருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கடந்த வியாழக் கிழமை இரவு கொழும்புக்குச் சென்றிருந்த மை தெரிந்ததே. (எ-11)


# வாழ்த்துகின்றோம்


MR. T. KUBENTHIRAN
SALES MANAGER
WINNER OF FULL GOLD


MISS. S. KAVIMOHANA
EXECUTIVE
WINNER OF SERVICE CHAMPION (NORTHERN ZONE)


MR. V.THUVARAGAN
INSURANCE ADVISOR
WINNER OF MDRT, MRRT & FULL GOLD


MR. R. ERIYASINGAM
INSURANCE ADVISOR
WINNER OF MRRT & FULL GOLD


MR. S. KARTHEEPAN
INSURANCE ADVISOR
WINNER OF FULL GOLD


MR. A. JEYAKRISHNA
INSURANCE ADVISOR
WINNER OF FULL GOLD


MISS. N. THUJITHA
INSURANCE ADVISOR
WINNER OF HALF GOLD


MR. B. PREMKUMAR
INSURANCE ADVISOR
WINNER OF MERIT CERTIFICATE


MISS. K. NILANITHY
INSURANCE ADVISOR
WINNER OF MERIT CERTIFICATE

யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் 2011 ஆம் ஆண்டில் சிறந்த விற்பனையாளராக தெரிவு செய்யப்பட்டு கடந்த செவ்வாய்க்கிழமை (26.06.2012) அன்று நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட பருத்தித்துறை பிராந்திய உத்தியோகத்தர்களையும் வட வலய உத்தியோகத்தரையும் மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : யூனியன் அஷ்யூரன்ஸ்
வட வலய முகாமையாளர், பருத்தித்துறை பிராந்திய உத்தியோகத்தர்கள்
(8742)



## விற்பனையாளர் தேவை

யாழ் நகரில் உள்ள புடவை விற்பனை நிலையத்துக்கு ஆண், பெண் விற் பனையாளர் உடன் தேவை.

Note: தூரம் - 10 km
வயது 18 - 45

தொடர்புக்கு: 0727122944
0212225578

(8745)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.